
# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

செப்ரெம்பர்.11 - செப்ரெம்பர்.17, 2013 பக்கம் - 24 30/-

# வேகமெடுக்கும் தேர்தல் சவாரி

## குருக்கள் செய்தால்.....!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொகுப்பு : வரு

# விளையாட்டு

## ஒழுக்கக்கேடும், வெட்கக்கேடும்!

சில வாரங்களுக்கு முன்னர் இவ் விளையாட்டுப் பகுதியில் அலசியதைப் போல கனவான்களின் விளையாட்டு அதன் தனித்துவத்தை இழந்து வருகின்றது என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

3 : 0 என்ற கணக்கில் ஆஷஸ் தொடரை வெற்றி கொண்டு மீண்டும் ஒருமுறை அவுஸ்திரேலியா அணிக்கெதிராக வரலாற்று தொடர் வெற்றியைப் பதிவு செய்திருந்தது இங்கிலாந்து.

பொதுவாகவே வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபடும் அணியினர் விலையுயர்ந்த ஷாம்பெய்ன் மதுப் போத்தல்களை உடைத்து விசிறியடிப்பதும், தங்களுக்கான உடை மாற்று அறையில் கும்மாளமிடுவதும் வழமை. இந்தக் கூத்துக்களை எல்லாம் ஊடகங்களும் கண்டுகொள்ளாது. ஆனால், ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி ஓவல் மைதானத்தில் வெற்றி தோல்வியற்ற முடிவைத் தந்திருந்தாலும், தொடரின் வெற்றி இங்கிலாந்து வீரர்களை தலைகால் புரியாத சந்தோசத்தில் ஆழ்த்தியது.



நள்ளிரவு வரை நீடித்த இந்தக்கொண்டாட்டங்களில் ஈடுபட்டவர்களில் கெவின் பீட்டர்ஸன், ஜேம்ஸ் அன்டர்ஸன், ஸ்ருவேட ப்ரோட் ஆகிய வீரர்கள் போதை தலைக்கேறியதால் மைதானத்தின் ஓரமாக சிறுநீர் கழித்தார்கள். இதனை மைதானக்காப்பாளர்கள் கவனித்தாலும் பேசாமல் இருந்து விட்டார்கள். ஆனால், மறுநாளோ அவுஸ்திரேலிய ஊடகங்களில் இப்பிரச்சினை பூதாகாரமாக உருவெடுத்தது. நள்ளிரவு வேளையானாலும் பலரும் பார்த்திருக்க இச்சம்பவம் இடம்பெற்றதால் இங்கிலாந்து கிரிக்கெட் சபையால் மூடிமறைக்க முடியாது போய்விட்டது.

இங்கிலாந்து வீரர்களின் இந்த அருவருப்பான செயலுக்கு, பல்வேறு பட்டதரப்பிலிருந்து குறிப்பாக முன்னாள் வீரர்களிடமிருந்து கண்டனங்கள் எழுந்தன.

நிலைமையை சுமூகமாக்கி முற்றுப்புள்ளி வைக்க நினைத்த இங்கிலாந்து கிரிக்கெட் சபை எழுத்து மூலமான பகிரங்க மன்னிப்பைக் கோரியது. அந்த அறிக்கையில், ஒரு அணியாக கிரிக்கெட் மைதானங்களுக்கும் எதிரணி வீரர்களுக்கும் மதிப்பு தருவது கடமையாகும். ஆனால், ஆஷஸ் தொடரை இங்கிலாந்து அணி வென்ற மகிழ்ச்சியில் விரும்பத்தகாத சம்பவம் நடந்து விட்டது. இந்த விஷயங்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கன அலல. ஆனால, உள்நோக்கத்துடன் செய்யப்பட்டவையும் இல்லை. இந்தச் சம்பவம் யாருடைய மனதையும் காயப்படுத்தியிருக்கும் பட்சத்தில், இதற்காக மன்னிப்பு கேட்டுக்கொள்கிறோம் - என்றிருந்தது.

ஸ்ரரீவ் வோ, ரிக்கி பொன்டிங் தலைமையில் அவுஸ்திரேலியா அணி கலக்கிய போது, ஆஷஸ் தொடரை இங்கிலாந்து சொந்த மண்ணிலும், அவுஸ்திரேலியாவிலும் இழந்துகொண்டேயிருந்தது. இந்நிலையில் பீட்டர்ஸனின் வருகையுடன், 18 வருடங்களுக்கு பின்னர் இங்கிலாந்தில் ஆஷஸ் தொடரைக் கடந்த 2005இல் இங்கிலாந்து கைப்பற்றியிருந்தது. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வெற்றிக்கொண்டாட்டங்களில் இங்கிலாந்து வீராகள் வாரக்கணக்காக போதையில் மிதந்தமை ஊடகங்கள் வாயிலாக வெளிப்பட்ட விடயம். அதுமட்டுமல்லாது, சிறுநீர் சர்ச்சையில் சிக்கிய அண்டர்சன், ப்ரோட் ஆகியோர் ஏற்கனவே நிர்வாண போஸ் கொடுத்து சர்ச்சையில் சிக்கியவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## விருதுக்கு தகுதியாவன்!



கடந்த வாரம் மொனாக்கோவில் நடந்து முடிந்த யூஏஃபாவின் கடந்த பருவகாலத்துக்கான ஐரோப்பாவின் சிறந்த வீரர் விரு தினை வென்ற பயர் முனீச் அணியின் நட்ச திரம் ஃபிராங் ரிபரி (3 வயது), தான் இந்த வி துக்கு மட்டுமல்ல ஃபீப வின் உயரிய விருதா ஆண்டின் உலகின் தலை சிறந்த உதைபந்தாட்ட வீரர் (ஃபீஃபா பலூன் டி) விருதுக்கும் தகு யானவன் என்று தெரிவித்திருக்கின்றார்.

யூஏஃபாவின் இந்த விருதிற்கு இறுதி போட்டியாளர்களாக ரிபரி மெஸ்ஸி , கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆகியோர் அறிவிக்கப்பட்டிருந் நிலையில் மெஸ்ஸி , ரொனால்டோ ஆகிய இருவரையும் பின்தள்ளி அந் விருதினை தட்டிச்சென்றார் . கடந்த பருவகாலத்தின் போது ரிபரி ஆடிவரு ஜேர்மனியின்பயர்ன் முனீச் அணியான பௌண்டஸ்லீகா, சம்பியன்ஸ் லீக், டி.எஃப்.ஏ போக்கல் ஆகிய மூன்று பிரதான கிண்ணங்களை வென் றிருந்தது. இந்த வெற்றியில் ரிபரியின் திறமையான பங்களிப்புக்காகவே இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த பருவகாலத்தின் போது பயர்ன் முனீச் அணிக்காக 11 கோல்களைஅடித்து அசத்திய ரிபரியின் அடுத்த இலக்கு 2013ம் ஆண்டுக்கான பலூன் டி ஓ விருதினை வெல்வதாக இருக்கின்றது.

யூஏஃபாவின் விருதானது ஒரு பருவகாலத்துக்கான விருதாகும், ஆனால் பலூன் டி ஓ விருது ஒரு வருடத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரையிலும் ஒரு வீரர் செயற்படும் திறனை வைத்தே வழங்கப்படுகிறது . 2013ம் ஆண்டு நிறைவடைவதற்கு இன்னமும் மூன்று மாதங்கள் இருக்கின்ற நிலையில், இனிவரும் போட்டிகள் தான் அந்த விருதினை பெறுபவர் யார் என்று தீர்மானம் செய்வதாக இருக்கும். 2013ம் ஆண்டுக்கான பலூன் டி ஓ விருதை பெறுவதற்கு , கடந்த வாரம் தனது 23வது ஹட்ரிக் அடித்து சாதனை செய்த பார்சிலோனாவின் நட்சத்திரமும், தொடர்ச்சியாக நான்கு தடவைகள் பலூன் டி விருதினை வென்றவருமான லியோனல் மெஸ்ஸியிடமிருந்து கடும் போட்டி ஒன்றை ஃபிராங் ரிபரி எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இலங்கையணியின் முன்னாள் அணித்தலைவரும், விக்கெட் காப்பாளருமான குமார் சங்கக்கார மீது ரசிகர்களுக்கும், கிரிக்கெட் வீரர்களுக்கும் என்றுமே தனி மதிப்புண்டு. திறமையானவர், துணிச்சலானவர், மனிதநேயம் கொண்டவர், நற்பண்பு நிறைந்தவர் என இவரது குணாதியசங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இலங்கை கிரிக்கெட் சபையும், அழுத்தம் தரும் எனத் தெரிந்திருந்தும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த லண்டன் - லோர்ட்ஸ் உரையை கடந்த 2011 இல் ஆற்றியிருந்தார். இதன் மூலம், விளையாட்டைத் தாண்டி தமிழர்கள் பலரின் மனதிலும் இடம்பிடித்தார் சங்கா.

குமார் சங்கக்காரவின் அணிகளான ஹைதராபாத் சண் றைசர்ஸ், கந்துரட்ட மரூன்ஸ் ஆகிய இரு அணிகளும் சம்பியன்ஸ் லீக் '20/ 20' தொடருக்குக்கான தகுதிகாண் சுற்றில் விளையாடுவதற் குத் தகுதிபெற்றுள்ள நிலையில், அவர் எந்த அணிக் காகப் பங்குபற்றுவார் என்ற சந்தேகம் காணப்பட்டது.



இந்த நிலையில் கந்துரட்ட அணி சார்பாக இத் தொடரில் விளையாடுவதற்கு முடிவு செய்த குமார் சங்கக்கார, இந்த விவகாரத்தை தவறான வழியில் கொண்டு சென்றமைக்காக இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க மீது கடுமை யான விமர்சனங்களை முன்வைத்திருந்தார். அவர், தனிப்பட்ட ரீதியில் தன் மீது பழிபோடும் எண்ணத்தோடு திட்டமிட்டு செயற்படுவதாகக் சங்கக்காரா குற்றஞ்சாட்டியிருந்தார். இக்கருத்துக்கள் தொடர்பாக இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் தனது அதிருப் தியை வெளிப்படுத்தியிருந்ததோடு, சங்கா ஊடகங்களுக்கு இவ்வாறான கருத்துக்களை முன்வைத்தமை தொடர்பாகத் தனது கண்டனங்களை வெளிப்படுத்தியிருந்தார். தற்போது இந்த முறுகல் சமரசத்துக்கு வந்துவிட்டாலும் அது சங்காவின் மனதில் ஆறாத வடுவாகவே இருக்கப் போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணாடிக் கூட்டுக்குள் இருந்து கல்லை எறியலாமா?

**புத்திரசிகாமணி**

“அரசியல் ஒரு சாக்கடை. நாற்றம் சகிக்க முடியவில்லை': என்று கூறிக்கொண்டே பலர் இன்று அதே சாக்கடைக்குள் மூழ்கிப் போய்விட்டனர். 'என்னப்பா இது அப்படியெல்லாம் சொன்ன நீ இப்படி ஆகிவிட் டாயே' என்று கேட்டால் அவர்களுடைய பதில் ஆச்சரியப்படவைக்கின்றது.

"சாக்கடையை துப்புரவு செய்வதற் காகவே இறங்கினேன். இப்பொழுது எழுந்து வரமுடிய வில்லை என்று சர்வ சாதாரணமாகப் பதில் அளிக்கின்றனர். இப்படிக் கூறிக் கொண்டே பல தலைவர்கள் ஒரு சமுகத்தையே சாக்கடையாக்கி விட்டுத் தம்மீதும் சேற்றைப் பூசிக் கொள்கின்றனர். இப்படி ஒரு இக்கட்டான நிலைக்குள் சிக்சிச் சீரழிந்து திக்கு முக்காடுகின்றனர் அப்பாவிகளான மலையகத் தொழிலாளர்கள்.

"இருளில் மூழ்கி உள்ள மலையகத்தை ஒளிமயமாக மாற்றுவோம். பின் தங்கிக்கிடக்கும் மலையகத் தொழிலாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறோம். கல்வி, கலை, கலாசார மேம்பாட்டுக்காகப் பாடுபடுவோம். பொருளாதார வளத்தை அபிவிருத்தி செய்வோம். அறியாமையை நீக்குவோம்" என்று புரட்சிகரமாக வீர வசனங்களைப் பேசிக் கொண்டு பல தலைமைகள் வெளிப்பட்டது என்னவோ உண் மைதான். ஆனால் இவர்களால் மலையகத்துக்கு என்ன நன்மை ஏற்பட்டுள்ளது? உழைத்து உழைத்து ஓடாய்ப் போய் கூனி நிற்கும் மலையகத் தொழிலாளர்களைப் போலவே அவர்களின் வாழ்வும் போரில் இன்றும் கேள்விக் குறியாக இருக்கின்றது.

இன்று நேற்றல்ல காலம் காலமாகத் தொழிலாளர்களைப் பணயம் வைத்து சூதாட்டம் நடத்தி சுவை கண்டுவிட்டனர் பலர்.

இக்கரை மாட்டுக்கு அக்கரைப் பச்சை என்பது போல் ஒவ்வொரு புதிய தலைமைகளும் உருவாகும்போது அவர்கள் பின் செல்வது வழமையாகி விட்டது. புதிய தும்புத் தடி நன்றாகக் கூட்டும் என்ற பழமொழிக்கேற்ப "இவர்களும் அவர்கள் தான்" என்று தொழிலாளர்கள் வேதனையுடன் புலம்பு வதை இப்பொழுதும் கேட்கக் கூடியதாக இருக் கின்றது.

எவர் எக்கேடு கேட்டாலும் நமக்கு என்ன நம் பங்கு வந்தால் போதும் என்று போட்டி போட்டுக் கொண்டு' அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என ஒற்றுமையாக வாழ்ந்த மலையகத் தொழிலாளர்களைத் தொழிற் சங்கங்கள் என்ற பெயரில் பல பல கூறுகளாகப் பிரித்து சின்னா பின்னமாக்கி விட்டனர்.

பல தசாப்தங்களில் முன் தொழிற்சங்கம் தொழிலாளர் போராட்டம் என்றால் பீதியடைந்தனர் வெள்ளைத் துரைமார். ஆனால் இன்று அந்தத் துரைமார் புகைத்து விட்டு வீசும் சிகரெட் துண்டிற்குக் கூட தொழிற் சங்கங்களை மதிப்பதில்லை. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் தானே. நெல்லிக்காய் மூடைபோல் தொழிற் சங்கங்கள் என்ற சாக்கிற்குள் கட்டிவைக்கப்பட்டுள்ள தொழிலாளர்களை வதைப்பதற்கு தொழிற்சங்கத் தலைமைகளை நன்றாகவே பயன்படுத்திக் கொள்கின்றனர் தோட்ட நிர்வாகத்தினர்.

ஒரு தொழிற்சங்கம் மேட்டிற்கு இழந்தால் மற்றும் ஒரு தொழிற்சங்கம் அதனைப் பள்ளத்தில் இழந்து விடத் தயாராக இருக்கின்றது. இது தோட்ட நிர்வாகங் களுக்கு நல்ல வாய்பாகிவிட்டது.

குறிப்பாகத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுப் போராட்டத்தை எடுத்துக் கொள்வோம்.

மனிதாபிமானத்துடன் சட்டரீதியாக வழங்கப்பட வேண்டிய பல கோடி ரூபாய்களுக்கு மாற்றீடாக இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை தொழிற்சங்கத் தலைமைகளுக்குப் பல லட்சங்களைச் சந்தோஷம் வழங்கி அடிமைச் சாசனம் ஒன்றை எழுதி வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். இதன் மூலம் கிடைக்கும் அற்ப சொற்ப சலுகைகளுக்காகத் தோட்டத் தொழிலாளர்கள் முட்டி மோதிக் கொள்கின்றனர். அடிபட்டு சாகின்றனர். இதனால் இவர்கள் கண்டபலன் ஏதும் இல்லை.

"மலையகத்தில் பெரிய பாடசாலைகளைக் கட்டி உள்ளோம். பாதைகளை அமைத்துள்ளோம். குடியிருப்புகளை ஏற்படுத்தி உள்ளோம். தொழிலாளர்களின் குடிமனைகளுக்கு மின்சாரம் வழங்கி உள்ளோம்" என்று தம்பட்டம் அடித்துக் கொள்கின்றனர்.

எந்த ஒரு தலைவராவது நெஞ்சில் கைவைத்துச் சொல்லட்டும். தமது சொந்தப் பணத்தில் அதாவது மாதா மதம் சந்தா என்ற பெயரில் சுரண்டிக் குவிக்கும் பல கோடி ரூபாய்களில் இருந்து செய்தோம் என்று. முடியவும் முடியாது.

ஒரு பாடசாலையை, மின் விநியோகத்தை வீடமைப்புத் திட்டத்தை அல்லது பாதைகளை அங்குரார்ப்பணம் செய்யும்போது அங்கே ஒரு அழகான கருங்கல் பதிக்கப்பட்டிருக்கும் அதில் 'எக்ஸ்' என்ற அமைச்சருக்கு அல்லது 'வை' நாடாளுமன்ற உறுப்பினரின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து செய்யப்பட்டது. இதனை எவரோ ஒரு அமைச்சர் அல்லது நாடாளுமன்ற உறுப்பினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது" எனக் கொட்டை எழுத்தில் பதிக்கப் பட்டிருப்பதைப் காணமுடியும்.

வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படும் நிதி நாம் வாங்கும் ஒரு துண்டு சவர்க்காரம் முதல் தபால் அனுப்பும் முத்திரை வரை நாம் செலுத்தும் வரிப்பணத்தில் இருந்துதான் என்பதை இந்த மக்கள் அறிவதில் லை. அதை வெளிப்படுத்துவதும் இல்லை.

திறப்பு ஷிழாக்களுக்கு வரும் தலைவர்களை வரவேற்கவும் அலங்காரப் பந்தல் போடவும், அமைச்சரும் ஆள் உயர மாலைகளைப் போடவும், மேள தாளங்களை ஏற்பாடு செய்யவுமே லட்சம் லட்சமாகத் தொழிலாளர்களின் சந்தாப் பணத்தைச் செலவிடுகின்றனர். இது மட்டுமா, வருடா வருடம் நடத்தும் மேதின விழாக்களுக்குத் தென் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சினிமாப் பாடகர்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் போட்டி போட்டுக் கொண்டு தொழிலாளர்களின் சந்தாவை கோடி கோடியாக விரயம் செய்கின்றனர்.

கூத்துக்கும் கும்மாளத்துக்கும் கோடி கோடியாகச் செலவிடப்படும் தொழிற்சங்கச் சந்தாவைக் கொண்டு மலையகத்தில் இன்று தனியான உயர் கல்விப் பீடங்களை, பல்கலைக் கழகங்களைத், தொழிற் சாலைகளை உருவாக்கி இருக்க முடியும். இதைப் பற்றி எவரும் சிந்திப்பதும் இல்லை. தட்டிக் கேட்கும் தைரியமும் இல்லை.

கோடி கோடியாக வசூலிக்கும் சந்தாப் பணத்தில் பிச்சை போடுவது போல் சிறுதொகையை தோட்டங்களில் தலைவர்களுக்கும், மாவட்டக் கமிட்டி உறுப்பினர்களுக்கும் கோட்டா என்ற பெயரில் வழங்கி, ஒரு கொத்தடிமைக் கூட்டத்தைத் தம் கையில் வைத்துக் கொள்கிறார்கள் பெரும் தலைவர்கள்.

இங்கே ஒரு உண்மையை வெளிப்படுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தோட்டங்களை அண்டி வாழும் சிங்கள, முஸ்லிம் கிராமங்களிலும் நகட் புறங்களிலும் பாடசாலைகள் கட்டப்படவில்லையா? பாதைகள் அமைக்கப்படவில்லையா? வீடமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்படவில்லையா? காணிகள் வழங்கப்படவில்லையா? மின்சாரம் வழங்கப் படவில்லையா? வைத்தியசாலைகள் அமைக்கப்பட வில்லையா? தொழிற்சாலைகளை உருவாக்கி தொழில் வாய்ப்புக்களை வழங்கவில்லையா?

இவர்கள் எந்தத் தொழிற்சங்கத்தில் இருக்கின்றனர். எந்தத் தலைவருக்கு மாதா மாதம் சந்தா கட்டுகின்றனர் என்று பாருங்கள். மக்களின் வரிப்பணத்தில் வாழும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு அரசாங்கம் அது பச்சையாக இருக்கலாம். நீலமாக இருக்கலாம். அந்த அரசு நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் வேண்டிய அடிப்படைத் தேவைகளைச் செய்து கொடுக்க வேண்டிய கட்டாயமும் கடப்பாடும் உண்டு. அதைத்தான் அரசுகள் செய்கின்றன.

நாட்டின் தேசிய வருமானத்தில் 60 வீதத்தைக் ஈட்டிக் கொடுக்கும் தேயிலை இறப்பர் தோட்டத் தொழிலாளர்கள் மட்டும் விதி விலக்கா என்று சிந்திக்க வேண்டும். அரசுகள் செய்யும் விடயங் களைத் தாமே செய்ததாக கூறி ஏமாற்றும் மலையத் தலைமைகளை, தெருத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு அடித்து மாலைகளை மட்டும் போட்டுக் கொள்ள வெட்கமாக இல்லையா?

தோட்டத் தொழிலாளர்களின் தலைகளைக் காட்டித் தொழிற்சங்க வியாாபாரம் நடத்தும் தலை மைகள் இன்று அதனையே மூலதனமாகக் கொண்டு அரசியல் மொத்த வியாபாரத்தை மும்முரமாக நடத்துகின்றனர்.

அரசாங்கம் மென்று துப்பும் எலும்புத் துண்டு களாக சிறு சிறு அமைச்சுப் பதவிகளுக்காகவும், பகட்டு வாழ்க்கைக்காகவும் அம் மக்களை பலி கொடுக்க ஆரம்பித்து விட்டனர். தம்மைத் தெரிவு செய்தால் தமது மக்களுக்கு என்ன செய்வோம் எதைச் செய்து கொடுப்போம் என்று கூறுவதற்குப் பதிலாகத் தமது உடன் பிறப்புக்களையும் மாற்றுக் கட்சி சக வேட்பாளர்களையும் தனிப்பட்ட முறையில் விமர்சிப்பதிலும் கேவலப்படுத்தும் வகையில் பிரசாரம் செய்வதிலுமே தீவிரமாக இறங்கி உள்ளனர் என்பதுதான் வேதனை.

ஒரு சமூகத்தை உசுப்பிவிட்டு கலவரங்களை ஏற்படுத்துவதற்குத் தலைவர்கள் இரண்டு விடயங் களைப் பயன்படுத்திவருகின்றமை ஒன்று சமயம், மற்றது சாதி. மலையத்தில் இன்று இவற்றைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு முட்டிமோதுகின்றனர் மலையகத் தலைமைகள். இவர்கள் ஒருவருக்கு ஒருவர் சரமாரியாக வாரி இறைக்கும் கேவலமான விமர்சனங்கள், பரஸ்பரத் தாக்குதல்கள் இன்று ஏனைய சமூகங்கள் வேடிக்கை பார்க்கும் நிலைக்கு வந்த விட்டன.

கண்ணாடிக் கூட்டுக்குள் இருந்து கொண்டு கற்களை எறியும் நிலை இது. இவர்களின் அரசியல் கலாசாரம் மாற்றுக் கட்சியினர் இவர்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்ய வேண்டிய அவசியமே இல்லை. இவர்கள் தமக்குத் தாமே குழிபறித்துக் கொள்கின்றனர். அத்தோ பரிதாபம் மலையகத் தொழிலாளர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னைச் சுடும் தன்வினை!

■ அக்கினி புத்திரன்



கடந்த வாரம் வடமாகாண சபைத் தேர்தல் களத்தில் ஒரு பெரும் பரபரப்பு! இத்தனைக்கும் இலங்கை தேர்தல் களங்களில் இது வரை நடந்து விடாத பெரும் சம்பவமெதுவும் நடந்து விடவில்லைதான்! தேர்தல் காலங்களில் இப்படியெல்லாம் நடப்பதுண்டு.

ஆனால் இந்த முறை வித்தியாசமானவர்கள் மேல் நடத்தப்பட்டு விட்டது. இதில் பாதிக்கப்பட்ட தரப்பினரும் இப்படியான சம்பவங் களை நடத்திக் காட்டியவர்கள்தான்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் சர்வானாந்தாவின் ஆதரவாளர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக் கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியவர் அதே கூட்டமைப்பைச் சேர்ந்த வேட்பாளரான அங்கஜனின் தந்தை இராமநாதன் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். இதனால் கொதித்தெழுந்து விட்டனர் யாழ். மாவட்டத்தின்அதே கூட்டணியில் இடம் பெற்றுள்ள ஈ.பி.டி.பியினர் சார்பில் போட்டி யிடும் வேட்பாளர்கள். முன்னாள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மாநகரசபை உறுப்பினர் றெமிடியஸ் உட்பட பலர் உரத்த குரலில் கண்டனங்களை வெளியிட ஆரம்பித்து விட்டனர். கொழும்பு வானொலிகளும் கூட அலறத் தொடங்கிவிட்டன. சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டுமென்றே அழுத்தங்களும் அதிகரித்தன.

இறுதியில் இராமநாதன் இதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மறுநாள் நீதிமன்றில் நிறுத்தப்பட்டு விட்டார். இச்சம்பவம் நடப்பதற்கு இருநாட்கள் முன்பதாக யாழ்ப்பாண நகரப்பகுதியில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் தம்பிராசாவும் அவரது ஆதரவாளர்களும் இராமநாதனால் தாக்கப்பட்டனர் மிரட்டவும் பட்டனர். இச்சம்பவத்தை தம்பிராசா புகைப்படம் எடுத்தும் வைத்திருக்கிறார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக அவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். எனினும் இராமநாதன் கைதுசெய்யப்படவில்லை. தம்பிராசா மேற்படி சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் படிகோரி யாழ். பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தையும் நடத்தினார். இன்று கண்டனக்குரல்களை எழுப்பும் ஈ.பி.டி.பியினர் உட்பட எவருமேஇதைப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை.

இவ்வாறே ஐக்கிய தேசியக்கட்சியின்சார்பில்போட்டியிடும்துவாரகேஸ்வரனின் தேர்தல் காரியாலயம் சேதமாக்கப்பட்டது. அவருக்கும் உயிர்அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டது. இச்சம்பவங்கள் தொடர்பாகவும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இப்படியான நிலையில் மேற்படி சம்பவம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு தங்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படாவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் அத்தனை பேரும் தேர்தலிலிருந்து விலகப் போவதாக தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்து விட்டார் தூவாரகேஸ்வரன்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் மீதோ ஐக்கிய தேசியக் கட்சியின் மீதோ வன்முறை பிரயோகிக்கப்பட்டால் அது குற்றமல்ல ஈ.பி.டி.பியினர் மீது வன்முறை பிரயோகிக்கப்பட்டால் அதுமிகச் சிறிய குற்றம். அதுவே அரசதரப்பு மீது நடந்துவிட்டால் பெரிய குற்றம். இதுபொலிஸ் திணைக்களம் தமக்குத்தாமே வகுத்துக் கொண்ட சிறப்புச் சட்டமா என்ற கேள்வி எழுகிறது! ஒருவருக்குப் ஒரு கைத்துப்பாக்கி வைத்திருக்க அனுமதி வழங்கப்படுகிறது என்றால் அவர் அதைத் தனக்கு உயிராபத்து ஏற்படுகிறது எனக் கருதும் சர்ந்தர்ப்பத்தில் தற்காப்புக் காரணத்துக்காக மட்டுமே பயன்படுத்தலாம். அவர் அதை எந்த ஒரு வலிந்த தாக்குதலுக்கும் எக்காரணம் கொண்டும் பயன்படுத்த முடியாது. அதுமட்டுமன்றி அவரும் அனுமதி பெற்ற துப்பாக்கியைத் தேர்தல் காலத்தில் பாவிப்பதைச் சட்டம் தடைசெய்கிறது.

ஆனால் இராமநாதன் இத்துப்பாக்கியை தேர்தல் காலத்தில் ஒரு வலிந்த தாக்குதலுக்குப் பாவித்துள்ளார். இது நிரூபிக்கப்பட்டால் அவருக்கான துப்பாக்கி வைத்திருக்கும் அனுமதி இரத்துச் செய்யப்படுவதுடன் அதிகபட்சத் தண்டனையும் உண்டு. இது பொலிஸார் சமர்ப்பிக்கும் குற்றப்பத்திரிகையின் அடிப்படையிலேயே அமையும்.

ஒரு கொலைஇடம்பெற்றால்அது கைமோசக்கொலை என்றால் தண்டனை ஒத்திவைக்கப்பட்ட 5வருடச் சிறை. அதையே திட்டமிட்ட கொலை எனக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு நிரூபிக்கப்பட்டால் தூக்குத் தண்டனை. எனவே இராமநாதன் தற்காப்புக்காக ஆகாயத்தை நோக்கிச் சுட்டதாகவும், அது தவறுதலாகப் பட்டு விட்டதாகவும் கூறப்பட்டு இராமநாதன் பிணையில் விடுதலை செய்யவும் படலாம் அல்லது இராமநாதன் பிணையில் விடப்பட்டு வெளிநாடு போய் விடலாம்.

என்ன நடக்கும் என்பதை இப்போதெல்லாம் ஊகிக்க முடிவதில்லை. சில அதிகார பீடங்களின் விருப்பத்திற்கு அமைய தீர்ப்பு வழங்காவிடில் நீதிபதிகள் பதவி நீக்கம் செய்யப்படுதல் அல்லது இடமாற்றம் செய்யப்படுதல் இங்கு நிலவுகின்றது. நாம் கடந்த காலச் சம்பவங்கள் சிலவற்றை மறந்து விட முடியாது.

2005ஆம் ஆண்டுத் தேர்தல் பிரசாரங்கள் இடம்பெற்ற காலத்தில் தீவுப்பகுதிக்குள் பிரசாரங்களை மேற்கொள்ளத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் சென்று கொண்டிருந்தனர். அவ்வேளையில் அவர்கள் இடைமறித்துத் தாக்கப்பட்டனர். இத்தாக்குதலின் போது மாவை சேனாதிராஜா உட்படப் பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அந்த வன்முறைச் சம்பவத்திலும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதல் தொடர்பாக ஈ.பி.டி.பியின் தீவிர ஆதரவாளர்கள் எனக் கருதப்பட்ட சிலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர். பின்பு சில நாட்களின் பின்பு அவர்கள் பிணையில் விடுதலைசெய் யப்பட்டனர்.

இவ்வழக்கின் பிரதான சந்தேக நபர் வெளிநாட்டுக்குப் தப்பிப் போய்விட்டார். அவரைக் கைது செய்யவோ, நாட்டுக்குக் கொண்டு வரவோ இன்று வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இன்ரபோலின் உதவி நாடப்படவுமில்லை. மேற்படி வழக்கு கிடப்பில் போடப்பட்டுவிட்டது! அது அன்று ஈ.பி.டி.பியினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் கலந்ததேர்தல் வன்முறை இன்று அதே பாணியிலான தேர்தல் வன்முறை ஈ.பி.டி.பியனரால் நடத்தப்பட்டதைப் போலவே இப்போது மேல் இராமநாதனால் நடத்தப்பட்டுள்ளது.

இப்போது தன்வினை தன்னைச் சுட்டுள்ளது.

உடையார் வீட்டுக் கோழி முட்டை குடியானவன் வீட்டு அம்மியை உடைக்கும் என்பார்கள். இப்போது உடையார் வீட்டு ஒரு கோழி முட்டை அவர் வீட்டு இன்னொரு முட்டையுடன் மோதியுள்ளது. இப்போது உடையார் என்னசெய்யப்போகிறார் என்பது தான் கேள்வி? எனினும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனா தேர்தல் வன்முறையில் ஈடுபடுபவர்கள். எவராயினும் தராதரம் பார்க்காமல் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கடும் தொனியில் அறிவித்துள்ளார்.

ஆனால் அவருக்கு மேலால் அவரின் வார்த்தைகளைப் புறம் தள்ளி விட்டு வேறு விதமாக நடவடிக்கை எடுக்கவல்ல அதிகாரக் கரங்கள் உண்டு என்பதை மக்கள் நன்கறிவர்.

அதே வேளையில் தன் வினை தன்னைச் சுட்டாலும் அது தொடர்பான எவ்வித சுரணையுமின்றி மீண்டும் மீண்டும் தங்கள் வினைகளுக்குள் மூழ்கிக்கிடப்பவர்களும் உண்டு. தமிழ்மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையே முரண்பாடுகளையும் மோதல்களையும் திட்டமிட்டு உருவாக்கும் வகையில் செயற்படுகிறார் ஒரு முஸ்லீம் அமைச்சர்.

ஒரு முஸ்லீமின் காலில் கல்லு ஒன்று தட்டுப்பட்டாலும் அது விடுதலைப்புலிகளாலேயே வைக்கப்பட்டது எனவும் அதை தமிழ்தேசியக் கூட்டமைப்பு கண்டிக்கவில்லை எனவும் உரத்துக் கத்துவது அவரது வழமை. ஆனால் அடுத்தடுத்து முஸ்லிம் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டாலோ முஸ்லிம் பெண்களின் பர்தாவை நடு வீதியில் வைத்துக் களைய முயன்றாலோ அவர் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கம் பற்றிப் பேச ஆரம்பித்து விடுவார்.

சிறுபான்மை இனங்களுக்கிடையேயான மோதல்களை ஏற்படுத்தி பிரித்தாளும் அரசாங்கத்தின் சூழ்ச்சியைத் தலைமேல் கொண்டு சுமப்பவர் அவர். பொலிஸார் முன்னிலையிலேயே கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் உடைக்கப்பட்டதைக் கண்டித்து அவர் அச்சம்பவத்திற்கு பொலிஸ்மா அதிபரே பொறுப்பேற்க வேண்டும் எனக் கருத்து வெளியிட்டார். அவ்வளவு தான்; அவரது வீடு,காரியாலயங்கள் என்பன ஒரே நேரத்தில் கடும் சோதனைக்கு உட் படுத்தப்பட்டன. அவரது இன நல்லிணக்கத் தன் வினை அவரையே சுட்டுவிட்டது. ஆனால் அவர் அதைப் பொருட்படுத்தவேயில்லை. வடக்கில் நூற்றுக்கு மேற்பட்ட பள்ளிவாசல்கள் புலிகளால் அழிக்கப்பட்டபோது அதைச் கண்டிக்காத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெற்கில் பள்ளிவாசல் கள் மேல் நடத்தப்படும் சிறுசம்பவங்களைப் பெரிது படுத்துகின்றனர் எனத் குற்றம் சாட்டுகிறார் அந்த முஸ்லிம் அமைச்சர்.

அவருக்குத் தெற்கில் பள்ளிவாசல் இடிக்கப்படுவதும்,புனித குர்ஆன் வீதியில் வீசப்படுவதும் பிக்குகள் தொழுகையில் ஈடுபட்ட முஸ்லிம்களை விரட்டிவிட்டு மசூதியில் பிரித் ஓதுவதும் மசூதிக்கு பன்றி இறைச்சி போடப்படுவதும் சின்ன விஷயங்களாகப்படுகின்றன. இந்த வினையும் இவரைச் சுடும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை!

ஈ.பி.டி.பியினர் என்றால் என்ன,இராமநாதன் என்றால் என்ன,முஸ்லிம் அமைச்சர் என்றால் என்ன அதிகாரக்குடை நிழலில் நின்று போடும் ஆட்டங்களின் வினை அவர்களையே ஒருநாள் சுடும் என்பது வரலாற்று நியதி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையோருக்கான புதிய பகுதி!

# காதலர் மட்டும்...

## காதலில் வெற்றிபெற பெற்றோரை சமாளிப்பது எப்படி?

இளைய தலைமுறையினருக்கு காதல் வந்துவிட்டால் அவர்கள் மற்றவர்களை பற்றி கவலை கொள்வதே இல்லை.

தன் வீட்டில் என்ன நடக்கிறது, பெற்றோர்கள் என்ன நினைக்கிறார்கள் என எதை பற்றியும் சிந்திக்க இன்றைய அவசரக்கார காதலர்களுக்கு நேரம் இல்லை.

கண்டவுடன் காதல், பேஸ் புக்கில் காதல், இன்ரர்நெற்றில் காதல், மொபைல் போனில் காதல் என இன்றைக்கு காதல் பல பரிமாணங்களை கொண்டுள்ளது. துளிர்த்த காதல் கசிந்து போவதற்கு முன் திருமணம் செய்துவிட வேண்டும் என்ற எண்ணம் இன்று பெரும்பான்மையான ஆண்கள் மற்றும் பெண்களிடம் இருக்கிறது.

ஆண், பெண் இருவரும் பொருளாதாரத்தில் பெற்றோரைச் சாராமல் இருந்துவிட்டால் அவர்களின் சம்மதத்தைக் கூட கேட்காமல் அவசரமாக நான்கு நண்பர்கள் முன்னிலையில் ஆயிரம் காலத்து பயிரினை நடத்து வங்குகிறார்கள்.

உங்கள் காதல் உண்மையாக இருந்து இல்லற வாழ்க்கை சந்தோஷமாக இருந்தால் பிரச்சனை இல்லை. அதுவே வயதால் ஏற்படும் சலனத்தால் காதலித்து அது திருமணத்தில் முடிந்து இல்லற வாழ்வில் பிரச்சினை வரும்போது தான் பெற்றோரின் நினைவு வரும்.

காலம் கடந்த பிறகு இதையெல்லாம் யோசித்து சங்கடப் படுவதை விட காதலிக்கும்போதே அதை பெற்றோரிடம் தெரிவித்து அவர்களின் அபிப்பிராயத்தை அறிந்துகொள்வது நல்லது. உங்கள் காதல் நிலைப்புத் தன்மை இல்லாமல் இருந்தால் அதை பெற்றோர்கள் சுலபமாக கண்டு பிடித்து விடுவர். (அடுத்தவராம் தொடரும்)



## காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு

உங்கள் வாழ்வில் அல்லது உங் களுக்குத் தெரிந்தவர்களின் வாழ்வில் காதல் பரிசுகள் பற்றிய சுவாரசியமான சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவற்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எமக்கு எழுதி அனுப்புங்கள்.

தரமானவை வாரந் தோறும் இந்தப் பகுதியில் பிரசுரமாவதோடு, உங்களுக்கு ஆச்சரியமளிக்கும் பரிசுகளும் காத்திருக்கின்றன.



✍ அனுப்ப வேண்டிய முகவரி:
காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு
சுடர் ஒளி
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பரிசு பெற்றவர்கள் வாரநாள்களில் 021 567 7609 என்ற எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு துரிதமாக பரிசினைப் பெற்றுக்கொள்ளலாம்.

## நட்பே காதலானால்.....

■ சுபிதி



சிறுவயதில் இருந்தே சிலர் நண்பர்களாக இருப்பார்கள். திடீரென்று ஒருநாள் இருவருக்கும் இடையே காதலாக மாறியிருக்கும். ஆனால் இருவரும் அதை வெளிப்படுத்திக் கொள்ளத் தயங்குவார்கள். எப்படி சொல்வது? என்ன நினைப்பானோ என்று ஒருவித அச்ச உணர்வு ஏற்படும்.

நண்பர்களாக இருக்கும் இருவருக்குள் காதல் ஏற்படுவது இயல்புதான். அதைத் தகுந்த தருணம் பார்த்து தெரிவித்தால் வெற்றியாகும் என்கின்றனர் நிபுணர்கள். அவர்கள் கூறும் ஆலோசனைகளைப் படியுங்களேன்.

என்னதான் நண்பர்களாக இருந்தாலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படும் நெருக்கம் ஒரு இரசாயான மாற்றத்தை ஏற்படுத்தும். அடிக்கடி மிக அருகருகே இருக்க நேரிடுவதால் நட்பானது காதலாக கனியும். உடனே சட்டென்று காதலை வெளிப்படுத்த வேண்டாம். நேரம் பார்த்து எதிராளிக்கும் அந்த உணர்வு இருக்கிறதா என்பதை அறிந்து காதலை வெளிப்படுத்தலாம்.

நண்பர்களுக்கிடையே ஒத்த மனநிலை இருக்கும். நிறம், நடை, உடை, பாவனை, பிடித்த விஷயங்கள், கோட்பாடு, கொள்கை, சினிமா, வேலை என இருவருக்குமே ஒரே மாதிரியான எண்ண அலைகள் இருக்கும் - இதனால் கூட நட்பானது காதலாக மாறி விடும். ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள அக்கறை ஒருவருக்கொருவர் செய்துகொள்ளும் உதவி போன்றவை கூட மனதுக்குள் காதல் பூவை பூக்க வைக்கும். சந்தோசமோ, கவலையோ எதையும் உடனுக்குடன் பகிர்ந்து கொள்வது, வாழ்த்துச் சொல்வது, பரிசுப் பொருள் வழங்குவது, உடல்நலம் இல்லாத சமயம் உடனிருந்து கவனித்துக்கொள்வது போன்றவற்றால் காதல் அரும்பலாம். அதேபோல் ஆண்,பெண் இடையேயான உடல் ரீதியான கவர்ச்சி, அழகுணர்ச்சி ஆகிய காரணங்களும் நண்பர்களிடையே காதல் உருவாகக் காரணமாகிறது. எதுவாக இருந்தாலும் சரியான நேரம் பார்த்து அந்த காதலை வெளிப்படுத்துங்கள்.பொதுவாக ஆண்கள், அழகான பெண்களைத்தான் காதலிப்பார்கள். நேர் எதிராகப் பெண்களோ, தன்மேல் அன்பாக, அக்கறையாக, மனம் குதூகலிக்கப் பேசுபவனாக, தனக்குப் பாதுகாப்பாக இவன் இருப்பான் என்று எந்த ஆணை நினைக்கிறார்களோ அவர்களைத்தான் காதலிப்பார்கள். பெண்ணின் அழகைப் பார்த்து ஆணுக்குக்காதல் அரும்ப, ஆணின் அரவணைக்கும் குணமே பெண்ணுக்குக் காதலைத் தூண்டும் சக்தியாக இருக்கிறது.

ஆண் - பெண் நட்பு கம்பி மேல் நடப்பதற்குச் சமம். அந்த நட்பில் அதிகம் பேசப் பேச நெருக்கம் அதிகமாகும். நட்பு, காதலாகும் என்ற உண்மையை, அதில் இருக்கும் நல்லது கெட்டதுகளை உணர்ந்து, இறுதி வரை நட்பாகவே இருக்கலாம். அல்லது அந்த நட்பு காதலாக உருமாறும் சமயம் அது உங்களுக்கு உண்மையாக, நம்பிக்கையான வாழ்நாள் துணையாக இருக்கும் என்று நீங்கள் நினைத்தால், காதலை தைரியமாக சொல்லலாம்.

ஆண் காதல் சொல்லி பெண் ஏற்கவில்லை எனில், 'இனிமே நண்பர்களாகவே பழகலாம்' என்று சொல்லி மறுத்தாலும், அது அவன் அடிமனதில் வண்டல் மண் போலத் தேங்கி இருக்கும். அடுத்தடுத்து தொடர்ச்சியாகத் தன் காதலை சமயம் கிடைக்கும்போது எல்லாம் வெளிப்படுத்திக்கொண்டே இருப்பான். இறுதி வரை ஆணின் எண்ணம் மாறாது. உங்கள் நண்பன் உங்கள் வாழ்க்கைத் துணைவனாக வருவதில் எந்த சிக்கலும் இல்லை என்று நினைக்கும் பட்சத்தில் காதலை தைரியமாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

# உயிரைப் பரிசளித்த காதலன்




என் தோழி சுஜாவின் காதல் வித்தியாசமானது. போரினால் தன் உறவுகளை இழந்த ஒருவனையே அவள் நேசித்தாள். வாழ்க்கையே வெறுத்துப்போன நிலையில் சுற்றித்திரிந்த அவன் மீது சுஜாவுக்கு பிறந்த கருணை காதலாக மாறியது. ஒருநாள் அவனது பிறந்த தினத்தன்று வாழ்த்து மடலோடு தன் காதலையும் சொன்னால் சுஜா. அவனுக்காக தன் வாழ்க்கையையே பரிசாக சுஜா கொடுத்தாள். அன்புக் காக ஏங்கிக் கொண்டிருந்த அவனுக்கு சுஜாவின் பரிசு கடவுள் கொடுத்த வரம்போல இருந்தது. அன்று முதல் இருவரும் இணைபிரியாக் காதலர்களாக மாறினார்கள். பின்னர் வீட்டாரின் சம்மதத்தோடு திருமண பந்தத்திலும் இணைந்து கொண்டார்கள்.

வாழ்க்கை இன்பமாகப் போய்க்கொண்டிருந்தது. அன்று அவர்களின் திருமண நாள். தமக்கேற்ற துணையைத் தந்தமைக்காக இறைவனுக்கு நன்றிசொல்ல சுஜாவும் அவளது காதல் கணவனும் கோயிலுக்குச் சென்று வழிபட்டார்கள். ஆனந்தக் கண்ணீரை ஆண்டவனுக்குக் காணிக்கையாக்கிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். அப்போது எதிர்பாராத விதமாக முன்னே வந்த மோட்டார் சைக்கிள் இவர்கள் மீது மோதியது. இருவரும் திசைக்கொன்றாக விழுந்தார்கள். அதிலும் சுஜாவின் நிலை மோசமாக இருந்தது. தனது காயங்களைப் பொருட்படுத்தாது சுஜாவை வைத்திய சாலைக்குக் கொண்டோடினான் அவள் கணவன். அவன் தக்க தருணத்தில் அவளுக்குச் சிகிச்சை பெற வைத்ததால், சில நாள்களின் பின்னர் மீண்டும் அவள் எழுந்து நடமாட முடிந்தது. தான் கொடுத்த வாழ்க்கை என்ற காதல் பரிசுக்குப் பதிலாகத் தனது கணவன் திருமணநாளன்று உயிர் என்ற பரிசை தனக்குத் தந்துவிட்டான் என்று இப்போதும் ஆனந்தத்தோடு கூறுகின்றாள் சுஜா.

**நவரத்தினம் ஜசிதா,**
சென்.செபஸ்ரியார் வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப். II , – 17 , செப்., 2013

sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி–: 021 567 7609

## பயங்கரவாதியா? விடுதலை வீரனா?

தேர்தல் காலமென்பதால் மீண்டும் புலிகளைப் பற்றியும் அதன் தலைவர் பிரபாகரனைப் பற்றியும் பேச்சுகள் எழத் தொடங்கிவிட்டன. தமிழர்களின் விடிவுக்காகப் போராடிய பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்றே அரசும், புலிகளுக்கெதிரான கட்சிகளும் தேர்தலில் சொல்லி வருகின்றன. புலிகளால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பை வெல்ல விடக் கூடாது என்பதற்காகவே இந்தப் புலிக் கதைகளை அதிகாரம் மீண்டும் உலவ விட்டுள்ளது.

ஆனாலும் வழக்கம் போல இந்தக் கதைகளைக் கண்டும் காணாததுபோல நழுவிவிடும் கூட்டமைப்பு, இந்தமுறை தன்னுடைய நிலைப்பாட்டைத் தெளிவுபடச் சொல்லிவிட்டது.

"பிரபாகரன் பயங்கரவாதியல்ல. அவர் ஒரு மாவீரன்" என்று கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளரான சி.வி.விக்னேஸ்வரன் வல்வெட்டித்துறையில் - பிரபாகரனின் பிறந்த மண்ணில் - முழங்கியிருக்கிறார்.

எந்தவொரு நபரையும் நாம் பார்க்கும் கோணத்திலேயே அவரைப் பற்றிய மதிப்பீடு நிகழ்கிறது.

தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலாவும் புலிகளின் தலைவர் பிரபாகரனும் - ஒரே நோக்கத்துக்காகவே - தம் இன மக்களின் விடுதலைக்காகவே - போராடினார்கள். இந்தப் போராட்டத்தில் வெற்றி பெற்றதால் நெல்சன் மண்டேலா தென்னாரிபிக்காவின் பிதா மகனாகக் கொண்டாடப்படுகிறார். ஆனால் இறுதி நேரத்தில் தோற்றுப் போனதால் பிரபாகரன் பயங்கரவாதியாகச் சித்திரிக்கப்படுகிறார்.

அதேபோன்றுதான் வெள்ளையருக்கு எதிராகப் போராடிய சிங்கள மக்களின் விடுதலை வீரனான ஹெப்பிற்றி பொல்ல திஸ்ஸவே என்பவனை வெள்ளையர்கள் பயங்கரவாதி என்று பிரகடனப்படுத்தினர். ஆனால் காலம் கரைந்து செல்ல இப்போது சிங்கள மக்கள் அவரை தங்களின் விடுதலை வீரனாகக் கொண்டாடி வருகிறார்கள்.

இதேபோன்று ஒரு காலத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை மக்கள் வெளிப்படையாகத் தமது விடுதலை வீரராகக் கொண்டாடும் காலம் வரும் என்பதனையே விக்னேஸ்வரனின் கூற்று சுட்டி நிற்கிறது.



வி.கே.எம்.

# குருக்கள் செய்தால்....

"ஆலயம் தொழுவது சாலமும் நன்று... ஆனால் நல்லூரானை அரசியல் வாதிகள் தொழுவது நன்றல்ல."

பெரும்பாலான மக்களுக்கு இந்தக் கருத்தில் உடன்பாடு இருக்காது. ஆனால்சில வேளைகளில் உடன்பட்டுத்தான் ஆகவேண்டும்.

எங்கள் நாட்டு அரசியல் திட்டங்களும் அரசியல் விண்ணர்களும் இனிவரும் நாட்களில் இதை வலியுறுத்தும்போது நாம் அதை எற்றுக் கொள்ளத் தயாராகத்தான் இருக்கவேண்டும்.

பெரும்பாலும் நல்லூர்க்கந்தனை தரிசிக்க குடும்பமாக, சுற்றத்தாருடன், அயலவருடன் என்று எல்லோரும் வழிபடப் போவது வழக்கம். அதிலும் தேர்த் திருவிழா என்றால் வெளி மாவட்டங்களில் இருந்தும் மக்கள் வருவார்கள். தன்னை நாடிவரும் பக்தர்களில் யார் அரசியல்வாதி யார் சாதாரண குடி மகன் என்ற பேதம் கந்தனுக்குக் கிடையாது. யாழ்ப்பாணத்துக்கு வருகின்ற பிரபலங்கள் எல்லாமே மேலாடையைக் கழற்றி விட்டு, அர்ச்சனைத் தட்டுகளோடு நல்லூரானை வழிபடாமல் போனது கிடையாது. ஏனெனில் யாழ்ப்பாணத் தின் அடையாளமாக மாறிப்போய் விட்டது நல்லூர்.

வடக்குமாகாணத்துக்கு முதன்முறையாகத் தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்கான தேர்தல் பிரசாரப் பணிகளை வேட்பாளர்கள் முடுக்கி விட்டுள்ளனர். இந்த வகையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களும் தமது ஆதரவாளர்கள் சகிதம் பிரசாரக் களத்தில் குதித்துள்ளனர். தேர்தல் பற்றியோ பிரசாரம் பற்றியோ நல்லூர்க் கந்தனுக்கு ஏதுவும் தெரியாது. அவர் ஒரு அப்பாவி.

சம்பந்தரும் கூட்டமைப்புச் சார்பாக தேர்தலில் போட்டியிடும் முதலமைச்சர் வேட்பாளரான விக்கி ஐயாவும் நல்லூர் தேர்த்திருவிழாவுக்கு கும்பிடப் போயிருந்தவை. இதை மீடியாகாரர் போட்டோ, வீடியோ எடுத்தது பரவலா செய்தியும் வந்திருந்தது..

நிறை மீடியாக்களின்ர திருவிழாக்கால சிறப்பு அலுவலகங்கள் ஏராளமாக நல்லூர் ஆலயச் சூழலில் இருந்தது. அப்பிடித்தான் யாழ்ப்பாணத்து ரீவி ஒன்றும் தனது ஒளிபரப்புக் காரியாலயத்தை வைச்சு போற, வாற பக்தர்களை இழுத்துப் பிடித்து தேர்த் திருவிழா பற்றி கருத்துக் கேட்டுக்கொண்டு இருந்திச்சினம். அப்பிடி கருத்து கேக்கேக்க 'மைக்கை' சம்பந்தர் ஐயாட்டையும் நீட்டியிருக்கினம். அவரும் ஏதோ கருத்துச் சொல்லியிருக்கிறார்.

இது இணக்கப்படுத்தல்காரரின்ர காதிலையும் கேட்டிட்டுதுபோல. வேட்டியைக் கட்டிக் கொண்டு கோயில் வாசல்ல அமைச்சருக்குப் பின்னால நிண்டு அடியார்களுக்கு ஏதோ அள்ளி வழங்கிக்கொண்டிருந்த ஒருத்தர், அரைவாசியோட முருகனோட கோவிச்சுக் கொண்டு வீட்டை வந்திட்டார். வந்தவர் சும்மா நிற்கேல்லை. சூட்டோடுசூடா பத்திரிகை களுக்கு "கோயிலுக்கு வந்து கூட்டமைப்பு பரப் புரை செய்யினம். பாத்துக்கொண்டு பேசாம இருக்கிறார் முருகன்" எண்டு கண்டன அறிக்கை எழுதி அனுப்பியும் போட்டார்.

கோயிலுக்கு போறது சாமி கும்பிடத் தான். ஆனால் இப்ப எல்லாம் அப்பிடி இல்ல. ஆற்ற கழுத்தில பெரிசா ஏதும் தொங்குது, பிடுங்கினா எவ்வளவு தேறும் எண்டு ஒரு கூட்டம். யார் வாயில இருந்து என்ன கதை வருகுது எண்டு கேட்டு வீட்டுக்கு வந்து போட்டு குடுக்க இன்னொரு கூட்டம். இன்னும் கன நோக்கத்துக்காகத் தானே கன பேர் கோயிலுக்குப் போகினம். பக்திப் பரவசத்தோட கும்பிடப்போனா அடுத்த வன் என்னசெய்தா எங்களுக்கென்ன? நான் வந்தது கோயிலுக்கு சாமிகும்பிட. அதை கச்சிதமா முடிச்சிட்டு வீட்டுக்குப் போவம் எண்டு பெருந்தன்மையோட திரும்பியிருக்கவேணும்.

இணக்ககாரரும் அங்க என்ன கும்பிடவோ போனவை. அவை அங்க என்ன செய்தவை எண்டதை பல்லாயிரம் பக்தர்களும் கண்டவை. ஆனால் கோயில் கும்பிடப்போன சம்பந்தரும் விக்கினேஸ்வரனும்தான் மேடை போட்டு பரப்புரை செய்தவை எண்டு தங்கட கூத்துக்களை மறைக்க அறிக்கை வெளியிடுகினம்.

இப்பிடியே போனால் கொஞ்ச நாளில தேர்தல் காலத்தில் முருகனுக்கு தேரும் இழுக்கக் கூடாது, இன்னார் இன்ன இன்ன இடத்துக்கு மட்டுமே போகமுடியும் எண்டு லிஸ்ற் தருவினம். கவனம்!

பாவம் முருகனுக்கு இது ஒண்டும் தெரியாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமன்

# வேகமெடுக்கும் தேர்தல் சவாரி

நாளொரு கூட்டமும் பொழுதொரு நோட்டிஸுமாக களை கட்டத் தொடங்கிவிட்டது வடக் குத் தேர்தல். நடக்குமா? நடக்காதா என்பது பற்றியெல்லாம் அலசி ஆராய்ந்துகொண்டிருக்காமல் மனதில் பட்ட எல்லாவற்றையும் வாக்குறுதி என்ற பெயரில் வேட்பாளர்கள் ஒவ்வொரு மதில்களிலும் நோட்டிஸ்கள் மூலம் அள்ளி வீசுகிறார்கள்.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பிரசாரக் களத்திலும் முன்னிலை வகிக்கிறது. கூட்டங்களாக இருந்தாலும் சரி, சுவரொட்டிகளாக இருந்தாலும் சரி, பொதுமக்கள் சந் திப்புகளாக இருந்தாலும் சரி கூட்டமைப் பினரின் செயற்பாடுகளே ஓங்கி நிற்கின்றன. கடந்த காலத் தேர்தல்களில் இல்லாதளவுக்கு இந்தமுறை கூட்டமைப்பின் பரப்புரை நடவடிக்கைகள் தென்படுகின்றது. முன்னரெல்லாம் கூட்டமைப்புக்கும் மக்களுக்குமிடையே ஒரு இடைவெளி இருந்தது. கூட்டமைப்போடு கதைத்தாலே உயிர் போய்விடுவது போன்று மக்கள் பயந்தார்கள். அந்தளவுக்குச் சூழல்முழுதும் அச்சம் நிறைந்திருந்தது. துப்பாக்கி முனைகள் மக்களை ஜனநாயகப் பாதைக்குச் செல்ல விடாமல் மறைத்திருந்தன. ஆனால் இப்போது மெல்ல மெல்ல சர்வதேசத்தின் கண்காணிப்பால் இந்த இறுக்க நிலையில் தளர்வு ஏற்பட்டுள்ளது. அதனால் இப்போது கூட்டமைப்பின் பரப்புரை நிகழ்வுகளில் மக்கள் கூட்டம் அலை மோதுவதைக் காணமுடிகிறது. ஆனால் அரச தரப்பு வழமைக்கெதிராக இந்த பிரசார நடவடிக்கைகளைச் சற்று அடக்கியே வாசிக் கிறது. இதற்குச் சில காரணங்கள் உண்டு. அரச தரப்பின் பிரதான பங்காளிக் கட்சிக்கு ஆசன ஒதுக்கீட்டில் பெரும் அடி விழுந்திருந்தது. வடக்கின் முதலமைச்சராவதே தன்னுடைய கனவென்று கூறிவந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வேட்பாளர் பட்டியலிலேயே இடமில்லை. அத்தோடு அவர் கட்சி சார்பாகக் களமிறக்கப்பட்ட தவராசாவைக் கூட முதன்மை வேட்பாளர் என்று தான் சொல்கிறார்களே தவிர முதலமைச்சர் வேட்பாளரென்று எந்த இடத்திலும் அரசதரப்பு மார் தட்டவில்லை. ஏனெனில் நிச்சயமாக இந்தத் தேர்தலில் தாங்கள் வெல்ல முடியாது என்பதும் முதலமைச்சர் நாற்காலி என்பது எட்டமுடியாத கனிதான் என்பதும் அரச தரப்புக்கு நன்கு தெரியும். ஆனால் அரசின் இன்னொரு வேட்பாளர் சினிமாப் படப் பாணியில் தடல் புடலான பிரசாரத்தில் இறங்கியிருக்கிறார்.




கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது வராது வந்த மாமணியாகத் தோன்றிய இந்த வேட்பாளர் தன்னுடைய பெருமெடுப்பிலான பிரசார நடவடிக்கைகள் மூலமே மக்கள் மத்தியில் பிரபல்யமானார். ஆயினும் அந்தத் தேர்தலில் அவர் வெற்றி பெற முடியாவிட்டாலும் அரச கட்சியின் மாவட்ட அமைப்பாளர் என்ற அந்தஸ்தை அடைய முடிந்தது.

தற்போது வீணைக் கட்சியின் அடையாளம் தொலைந்து எல்லாமே வெற்றிலைக்குள் சங்கமித்துவிட்ட நிலையில் நடக்கமுடியாத அபிவிருத்திகளை நடத்திக் காட்டுவோம் என்று வாய்சவடால் விட்டாவது வாக்குகளை அள்ள அரச கட்சி முயல்கிறது. தேர்தல் சவாரியில் என்ன செய்தாவது வெல்ல வேண்டுமென்பதே அவர்களின் எண்ணம். ஆனால் மக்களின் எண்ணம்தான் யாருக்கு வெற்றி என்பதைத் தீர்மானிக்கப்போகிறது.

கடந்த காலங்களில் சலுகைகளைத் தூக்கி எறிந்துவிட்டு மக்கள் உரிமைக்காகவே வாக்களித்தார்கள் என்பதே வரலாறு. வரலாறென்பது மீள மீளப் பிரசவமாகும் ஒன்றுதானே.

பூமகன்

# சாப்பிட்டுப் போங்கோ.....!

'நாளைக்கு மீற்றிங்' என்ற தகவலோடு இன்று தான் பல அலுவலகங்களுக்கு கடிதம் வந்து சேர்ந்தது. முக்கிய கலந்துரையாடல் இருப்பதால் சம் பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளவேண்டும் அன்று அந்தக் கடிதத்தில் குறிப் பிடப்பட்டிருந்தது.

பலவருடங்களாக தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றி தற்போதுதான் ஆசிரிய உதவியாளர்களாக மிகக்குறைந்த கொடுப்பனவுடன் உள்வாங்கப் பட்டவர்கள், சமுர்த்தி ஊழியர்கள், அலுவலக பணியாளர்கள் என்று அனைவருக்கும் இந்த அவசர அறிவிப்பு அந்தந்தப் பிரிவுகளின் ஊடாக அனுப்பப்பட்டிருந்நது.

புதிதாக நியமனம் பெற்றவர்கள் என்பதால் கட்டாயம் அந்த 'மீற்றிங்கில்' கலந்துகொள்ள வேண்டிய ஏற்பட்டது. காரணம் 'வேலை இல்லாமல் செய்துபோடுவினம்' என்ற பயம் தான்.

'இவ்வளவு காலமா கஸ்ரப்பட்டு ஒரு வேலை கிடைச்சிருக்கு. அதையும் இப்பிடி ஏதும் சாட்டா வைச்சு பறிச்சிட்டா அதோ கதிதான்'

இந்த ஏக்கத்தோடு இரவோடிரவா வெளிக்கிட்ட பாதிப்பேர், விடியக்காலம வெளிக்கிட்ட பாதிப்பேர் என்று ஒரு அறுநூறுபேருக்கு மேலான வர்கள் குறித்த இடத்துக்கு வந்து சேர்ந்திட்டினம்.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என்று தூர இடங்களில் இருந்து இவர்கள் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

அவசரக் கூட்டம் எண்டதால பலபேரது நினைப் பும் பேச்சும் 'இது தேர்தல் மீற்றிங்' எண்டு தான். ஆனால் கூட்டத்தில எந்த அரசியல்வாதியும் கலந்து கொள்ளவில்ல. அதைவிட அரசியலும் கதைக் கல்லை. இதுதான் ஏற்பாட்டாளர்களது கெட்டித்தனம்.

போன வாரம் நவிப்பிள்ளைக்கு காட்டத் தயாரிச்ச அபிவிருத்தி அறிக்கைகளைதான் இவர்களுக்கும் போட்டுக்காட்டி, பாருங்கோ நாட்டில எவ்வளவு அபிவிருத்தி வேலையள் நடந்து கொண்டு இருக்கு எண்டுறதுக்குத் தான் இந்த மீற்றிங்.

வடக்கில் புதிதாகநியமனம் பெற்றுக்கொண்ட வர்களுக்கான கலந்துரையாடலே அது. கடந்த 5ஆம் திகதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் வடக்கு ஆளுநர் தலைமையில் தான் கூட்டம் நடைபெற்றது. வடக்குக் கான அரச அதிகாரிகளும், அமைச்சு அதிகாரிகளும் கலந்துகொண்டு தத்தமது அமைச்சு, திணைக்களங்களில் நடந்த, நடந்து கொண்டிருக்கும் அபிவிருத்தி வேலைகள் குறித்து விளக்கமளித்தனர்.


ஆவணப்படம்.

இடையிடையே ஆளுநர் வந்து "உங்கள் எல்லாருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்திருக்கு கட்டாயம் சாப்பிட்டுட்டு போங்கோ" எண்டு அறிவிச்சாராம். பெரிய கைதட்டல் ஆரவாரம் அவருடைய அறிவிப்புக்கு.

ஒருமாதிரி கூட்டம் முடிஞ்சுது. அதிகாரிகள் வெளியேறி விட்டனர். அவசர அவசரமாக மேடைக்கு வந்த ஒருவர் "யாழ்ப்பாணத்தில இருந்து வந்தவையளுக்கு சாப் பாடு ஒழுங்குபடுத்தேலை. நீங்கள் வீட்டைபோய் சாப்பிடுங்கோ. வெளிமாவட்டத்தில இருந்து வந்த எல்லாருக்கும் சாப்பாடு இருக்கு" என்று அறிவித்தார். அறிவிப்பை கேட்டதும் யாழ்ப்பாணத்தில இருந்து வந்த எல்லோரும் வீட்டுக்கு புறப்பட வெளி மாவட்டக்காரருக்கு, "கொஞ்சம் வெயிட் பண்ணுங்கோ சாப் பாடு வந்திடும்" எண்டு தகவல் கொடுத்திருக்கினம். ஒருமணி, ஒன்றரை, இரண்டு என்று நேரம் போய்க் கொண்டே இருந்தது. ஆனால் சாப்பாடு தான் வந்த பாடாக இல்லை.

தூரத்தில இருந்து முதல்நாளே வந்தவை, அதிகாலை வெளிக்கிட்டவை என்று பலபேர்.... பொறுமை இழந்து [illegible] ஆரம்பித்தனர்.

அப்பாடா !கொஞ்ச நேரத்தில கூட்டம் கலைஞ்சிட்டுது. ஏற்பாட்டாளர்களுக்கு மிக்க சந்தோசம். ஒருமாதிரி ஏமாத்தி அனுப்பிட்டம் எண்டு.

யாழ்ப்பாணம் பஸ்ராண்ட் வரை ஓட்டோக்கள், தனியார் பஸ்களில் தாவி வந்து சேர்ந்த பலர் கூட்டம் கூட்டமாக ஏதோ பேசிக் கொண்டிருந்திச்சினம். அதில எனக்கு அறிஞ்ச ஒருத்தரும் இருந்தார். "அண்ணை என்னாச்சு.என்ன இந்தப் பக்கம்?" எண்டு கதையக் குடுக்க..

"நாங்கள் ஆளுநற்ர மீற்றிங்குக்கு வந்தனாங்க. ஊருக்குப்போக நிக்கிறம்.கூட்டத்தில சாப்பாடு தாறம் தாறம் எண்டு அறிவிச்சாங்கள். தரல்ல. அதுதான் எங்கட ஆக்களின்ர அறிவிப்புக்கள் எப்பிடி எண்டு பெடியளோட கதைச்சுக்கொண்டு நிண்டன். தம்பி இதை பேப்பரில எழுதிடாதை. வெக்கக்கேடு எங்களுக்குத் தான்" சொல்லிவிட்டு பஸ்ஸில் ஏறிப்புறப்பட்டுவிட்டார் அவர்.

பாத்தீர்களா இந்த விருந்தோம்பல் பண்பை. கிடைச்சா எங்களுக்கு இப்பிடி இன்னும் கொஞ்சபேர் கிடைக்கணும். நல்லா வருவீங்கள். போங்கோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கலியாண ராமன்

—ஹரீஸ்—

"நாங்கள் எல்லோரும் நடிகர்கள். எங்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பாத்திரங்களை நடித்து முடிப்பது எங்கள்கடமை. இது எங்கள் தலைமை நடிகனுக்கும் தெரியும். மேர்வின் சில்வா ஒரு பாத்திரம். அவரின் கலியாணக் கதை கேட்டிருப்பீர்கள். விமல் வீரவன்ச ஒரு பாத்திரம் அவரின் உண்ணாவிரதம் பார்த்திருப்பீர்கள். எப்படி எல்லோரும் நடிப்பது தொடர்பில் தலைமை நடிகரின் தீர்மானம் முக்கியம். ஆகவே நானும் நடிக்க வேண்டியிருக்கிறது" என்று இலங்கையின் நீதியமைச்சரே வாய் விட்டுச் சொல்லும் அளவுக்கு இலங்கையின் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் அமைச்சரவையின் சீத்துவம் கொடிகட்டிப் பறக்கின்றது. தன் வாயால் சொல்ல முடியாதவற்றை தன் எடுபிடிகளை வைத்து சொல்லவிட்டு அதன் பிரதி விளைவுகளை அவதானித்து பின் அதை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் முடிவெடுப்பதே மஹிந்த அரசின் கடந்தகால, நிகழ்கால வாடிக்கையாக தொடர்கிறது. இதற்குத் தான் அரசு எண்ணிக்கையில் அடங்கா அமைச்சர்களை நியமனம் செய்து வைத்திருக்கிறது. அவர்களின் வாய்கள் எப்போதுமே எதையே செல்ல துடித்துக் கொண்டிருக்கும். விமல்வீரவன்ச, சம்பிக் ரணவக்க,மேர்வின் சில்வா என இந்த அமைச்சர்களின் இப்பட்டியல்கள் நீண்டு கொண்டே செல்கின்றன. இனவாதத்தை கக்குதல் மற்றும் அடிதடி கலாசாரம் பேணல் என்ற திணைக்களத்தையும் அதற்கான தனி அமைச்சு ஒன்றையும் இலங்கை அரசு ஏன் இன்னமும் உருவாக்க வில்லை என்பதே சர்வதேசத்திடம் உள்ள பில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாகும்.

இந்த அடிதடி கலாசாரத்தில் எப்போதுமே சுப்பர்ஸ்ரார் பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின்சில்வா தான். இவரின் மகனான மாலக சில்வாவும் புலிக்குப் பிறந்தது பூனையாகுமோ என்பது போல அடிதடியில் கைதேர்ந்தவர். ஒரு அமைச்சராக வெளிப்படுத்தியதை விட தென்னிந்திய திரைப்படங்களில் வரும் வில்லனைப் போலவே தன்னை அதிகம் வெளிப்படுத்தியிருக்கிறார் மேர்வின். இவரின் செயற்பாடுகளிலும் உரைகளிலும் எப்போதுமே வன்முறை கொப்பளிக்கும். ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம் என்பதைப் போல இலங்கையின் மொத்த அமைச்சர்களின் செயற்பாடுகளுக்கும் மேர்வின் சிறந்த ஆதாரம். இவரின் கருத்துக்களும் செயற்பாடுகளும் சிலவேளைகளில் சீரியஸாக ஆரம்பித்து பகிடியிலும், பகிடியில் ஆரம்பித்து சீரியஸாகவும் முடிவதுண்டு. அப்படியொரு ராசி மேர்வினுக்கு. 2004 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் மூலமாகவே அரசியலில் நுழைந்த மேர்வின் அதே வருடமே கட்சி தாவி சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அங்கத்தவரானார். தோல்வியின் விளிம்பிலும் அரசுக்கு இவரின் தேவைப்பாடு இருந்ததால் மேர்வினுக்கு அமைச்சர் என்ற அந்தஸ்தை வழங்கி அழகு பார்த்தது அரசு.

களனியின் தனிக்காட்டு ராஜாவான மேர்வின் சில்வாவின் புகழ் (?)ரூபவாகினி கூட்டுத்தாபனம் மீதான தாக்குதல்,சமுர்த்தி உத்தியோகத்தரை மரத்தில் கட்டிவைத்து அடித்தமை, சிலாபம் காளிகோயில் மிருக பலியைத் தடுத்தமை என்று பரவிக் கொண்டே இருக்கின்றது. இப்படிப்பட்ட மேர்வினுக்கு இன்னொரு தீராத வியாதியும் உண்டு. அது தான் அவரின் கலியாண ஆசை. அடிக்கடி தனக்கு திருமணம்நிகழ்ந்தது பற்றியும், மேரி லூசிடா எனும் மனைவி இருக்கிறார் என்பது பற்றியும் மறந்து விடுகிறார் மேர்வின். அதனால் எங்கெல்லாம் புதிதாக போகிறாரோ அங்குள்ள பெண்களைத்திருமணம்செய்யப் போவதாக வெட்கமின்றி தன் ஆசையை வெளிப்படுத்தி வருகிறார். இந்தத் தீராத விளையாட்டுப்பிள்ளையின் கலியாண ஆசை இலங்கை அரசையே இக்கட்டில் மாட்டி விட்டுள்ளது. நிகழ்வொன்றுக்காக யாழ்ப் பாணத்துக்கு அண்மையில் வந்திறங்கிய மேர்வின் சில்வா "கட்டினா தமிழ்பிள்ளையைக் தான் கட்டணும்டா" என்று பாடாத குறையாக அடிக்கடி யாழ்ப்பாணத்து பெண் ஒருத்தியை கைபிடிக்கும் ஆசை பற்றி சிலாகித்துக் கொண்டார். அவர் ஒரு கோமாளி என்பது யாழ்ப் பாணத்தவர்களுக்குத் தெரியும் என்பதால் இந்தக் கதையை எவரும் பெரிதாக எடுக்கவில்லை. இந்த உசாரில் தான் அண்மையில் இலங்கைக்கு வந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளரான நவநீதம்பிள்ளையை திருமணம் செய்யத்தான் தயாராக இருப்பதாக புதுக்குண்டொன்றை கொளுத்திப் போட்டார். இந்தக் குண்டுதான் பெரும்அதிர்வுகளை உண்டாக்கி இருக்கின்றது.

> தீராத விளையாட்டுப் பிள்ளையின் கலியாண ஆசை இலங்கை அரசையே இக்கட்டில் மாட்டிவிட்டுள்ளது.



விட்டேத்தித்தனமாகச் சொல்லப்பட்ட இந்தக் கருத்தால் சீற்றமுற்ற நவிப்பிள்ளை நேரடியாகவே தன்னுடைய கண்டனத்தை இலங்கையிடம் தெரிவித்தார். இந்த விடயம் பூதாகரமானால் சர்வதேச ரீதியில் தன்னுடைய பெயர் இன்னும்நாறி விடும் என்பதை உணர்ந்து கொண்ட அரசு உடனடியாகவே தடாலடியாகவே நவிப்பிள்ளையின் காலில் விழுந்து மன்னிப்பும் கேட்டுவிட்டது. இந்த நிலையில் தான் நவிப்பிள்ளையை திருமணம் செய்யப் போவதாக ஒருபோதும் சொல்லவில்லையென்று மேர்வின் சில்வா சத்தியம் செய்யத் தொடங்கியுள்ளார். இப்படித்தான் " சமுர்த்தி உத்தியோகத்தரை நான் மரத்தில் கட்டிவைத்து அடிக்கவில்லை. அவராகவே தன்னுடைய தவறை உணர்ந்து தன்னைத் தானே மரத்தில் கட்டி தனக்குத் தானே அடித்துக் கொண்டார்." என்று சொன்னவர்தான் மேர்வின்.

சட்டம் மற்றும் ஒழுங்கு என்ற புதிய அமைச்சு உருவாக்கப்பட்டவுடன் செய்த முதலாவது திருப்பணி மோப்ப நாய்களுக்கு திருமணம் செய்து வைத்து அவற்றை தேனிலவுக் காக நுவரெலியாவுக்கு அனுப்பியதுதான். உண்மையில் இந்த அரசு மோப்ப நாய்களுக்கு திருமணம் செய்து வைப்பதை விடுத்து கலியாண ராமனாக அலைந்து கொண்டிருக்கும் மேர்வின் சில்வாவை நோக்கி தங்கள் பார்வையைத் திருப்ப வேண் டும். நல்ல மோப்பநாயாக பார்த்து மேர்வின் சில்வாவுக்கு திருமணம் செய்து வைத்து தேனிலவுக்காக நுவரெலியா வுக்கு அனுப்ப வேண்டும். அப்படி செய்து வைத்தால் "இலங்கை அரசு மனிதாபிமானம் என்ற எல்லையையும் தாண்டி நாய்களுக்கும் அமைச்சர்களுக்கும் திருமணம் செய்து வைக்கிறது. இப்படி நாய்களுக்கே நல்வாழ்வு கொடுப்பது பற்றி யோசிக்கும் அரசு மக்களுக்கு ஒரு போதும் தீமை செய்யாது" என்று போருக்குப் பின்னரான மீள் கட்டுமானம் பற்றி ஐ.நா பாராட்டு அறிக்கை வாசிக்க முடியும். இதன்மூலம் இலங்கைக்கு சர்வதேச ரீதியில் நற்பெயரை வாங்கிக் கொடுக்க முடியும். என்றாலும் இதில் ஒரு இடையூறு இருக்கவே செய்கிறது. மேர்வினைத் திருமணம் செய்ய சம்மதம் சொல் லும் நாயை எங்கே போய்த் தேடுவது?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை



# மீண்டும் வசந்தம்

புத்தூர்
செ.பவானி

இனிய இளமாலைப் பொழுது. கடற்கரை மணலிலே கால்கள் இங்குமங்குமாய் நடைபோட்டுக் கொண்டிருந்தான் வசந்தன். உலகத்தின் சோகமனைத்தையும் தன்னுள்ளே அடக்கி வைத்திருப்பவன் போன்று கண்களிலே நீர்த்திரையோடு மனமெல்லாம் நினைவுகள் எங்கோ பறக்க நடந்து கொண்டிருந்தவனின் பார்வை கடல் மீது நிலைத்தது. ஆகா! இயற்கையன்னையின் படைப்பில் தான் எத்தனை அற்புதம். மேற்குக் கரையிலே தங்கத் தாம்பாளம் போன்று கதிரவன் கடலுக்குள் அமிழ்ந்து கொண்டிருந்தான். அவனின் பொன்நிறக்கதிர்கள் பொங்கி வரும் கடலலை மீது மஞ்சள் குழம்பை ஊற்றிவிட்டது போன்று மின்னியது. வெள்ளி முத்துக்களைப் போன்று மீன்குஞ்சுகள் வானத்தை நோக்கி குதித்து விளையாடின. ஆனால் இவற்றையெல்லாம் ரசிக்கும் மனநிலை தான் அவனிடமில்லையே. "ஓ!கடல்தாயே இத்தனை அமைதியாய் பொறுமையாய் இருக்கும் நீ எத்தனை பெரிய கோர நாடகம் ஆடிவிட்டாய். உனக்கு எம் மீது என்ன தான் வஞ்சம் உயிருக்குயிராய் நேசித்த உறவுகளை இழந்து அனாதையாய் நிற்கும் எமக்கு நீ என்ன பதில் சொல்லப் போகிறாய்? உனக்கேன் இத்தனை கொடூரம்" என புலம்பியவாறே மணலிலே உட்கார்ந்திருந்தவனின் நினைவு கடந்துவிட்ட அத்தியாயத்தை ஒரு கணம் மீட்டிப்பார்த்தது.

பருத்தித்துறை என்னும் அழகிய மீனவக்கிராமத்தில் பிறந்தவன் வசந்தன். பெரியபணக்கார குடும்பத்தின் ஒரே வாரிசு. அப்பா நல்லசிவம். ஒரு பேராசிரியர். வழிவழியாய் வந்த பணம், சொத்துக்கள், நிலங்கள், அத்தனைக்கும் சொந்தக்காரனாய் வந்துதித்தவன். சிறுவயதிலேயே சுறுசுறுப்பான பையனாய் அந்த ஊரையே வலம் வருவான். பக்கத்து மீனவ மக்களோடு கடலிலே மீன்பிடித்து அலையிலே விளையாட அவனுக்கு ஆசை. வசந்தனின் பெற்றோரோ மிகவும் கண்டிப்பான பேர் வழிகள். சாதி, மதம், அந்தஸ்து பார்க்கும் பெரிய மனிதர்கள். அவனை அந்த மக்களை திரும்பிக் கூடப் பார்க்க விடமாட்டார்கள். இருந்தாலும் பெற்றோரை மீறி வசந்தன் அந்த மக்களோடு மிகவும் அன்புடனும் பண்புடனும் அந்நியோன்னியமாக உறவை வளர்த்துக் கொண்டான்.

அந்த மீனவக்குடும்பத்தில் வசந்தனின் வகுப்புத் தோழியான மேரியும் அவனுடன் அன்பாகப் பழகி வந்தாள். இருவரும் மிகவும் நெருங்கிய தோழர்களாய் ஒருவருக்கொருவர் பாடங்களைச் சொல்லிக் கொடுத்து மேரியின் குடும்பமோ மிகவும் ஏழைக்குடும்பம். அவர்களின் தொழிலே கடலோடு கலந்த ஒரு காவியம். அதனால் தானோ என்னவோ மேரி நன்றாகப் படித்தாள். காலம் தான் எதையும் எதிர்பார்த்து நிற்பதில்லையே. இப்போது வசந்தனும் மேரியும் உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதியும் கிடைத்தது. காதலும் மலர்ந்தது. ஆனால் வசந்தனின் காதலுக்கு தடை விழுந்தது. அப்பா ருத்ர மூர்த்தியானார். அம்மாவோ பத்திரகாளியானாள். சாதி, மதம், பணம், புகழ், அந்தஸ்து எல்லாவற்றிலும் தமக்குச் சரி வராத அவளை மணக்க தாம் ஒரு போதும் சம்மதிக்கப் போவதில்லை என்றும் அதையும் மீறி வசந்தன் அவளை மணமுடிப்பதாய் இருந்தால் சொத்திலே ஒருசதம் கூட தரமுடியாது என்று மிரட்டல் போட்டனர்.

வசந்தனோ எதற்கும் அசைந்துகொடுக்காது தங்கள் காதலுக்கு இவை தான் அதைவிட உயர்ந்த இடத்திற்கு மேரியைக் கொண்டுவர முடியும் என்பது போல பெற்றோரின் எதிர்ப்பையும் மீறி தனது உயர்கல்வியையும் பாதியில் நிறுத்தி நண்பர் ஒருவனின் உதவியுடன் வெளிநாடு செல்ல ஆயாத்தமானான். மேரி எவ்வளவோ தடுத்தும் அவன் கேட்கவில்லை. அந்த கடலன்னை சாட்சியாய் தாம் தினமும் வழிபடும் அன்னை மாதா சாட்சியாய் அவளுக்கு ஆறுதல் கூறி தன் பெற்றோரின் கர்வத்தை அடக்கி எதிர்கால வாழ்வின் நலனுக்காய் தன் காதலை தற்காலிகமாய் விட்டு நீண்ட தூரம்பிரிந்து வெளிநாடு சென்றான். கடிதம் மூலம் காதல் தொடர்ந்தது. காலச் சக்கரத்தின் வேகமான சுழற்சியில் வருடங்கள் பல இறக்கை கட்டிப் பறந்தன. இப்போது மேரி தான் படித்த பாடசாலையிலே தனது கல்வித்திறனால் உயர்பதவி வகித்துக் கொண்டிருந்தாள். வசந்தனும் கோடீஸ்வரனாகி தனது உயிரிலும் இனிய காதலியை மனைவியாக்கி கோடீஸ்வர மருமகளாய் தன் பெற்றோர் முன்னே காட்டுவதற்காய் ஊரை நோக்கி பறந்து வந்தான். ஆனால் அவனுக்கு கிடைத்ததோ பேரிடி. வாழ்வே நிலைகுலைந்து விட்டதே. சுனாமி என்னும் அரக்க வடிவில் எழுந்த கடலன்னை அவனது ஊரையே நாசம் பண்ணி விட்டாளே. அவளின் உயிரான மேரி, அவளின் பாடசாலை அங்கே படித்த பிள்ளைகள், சாதி வெறி பிடித்த அவனது பெற்றோர், சொத்துக்கள் அனைத்தையும் ஒரு நொடியில் சிதைத்து தனது அரக்கப்பிடியில் அந்தஸ்து, கௌரவம் எதையும் பார்க்காது எல்லோரும் தனக்கு அற்ப புழுக்களே என்பதை கண்ணிமைக்கும் நேரத்தில் காட்டிச் சென்ற கடலலையை என்னவென்று சொல்வது.

திடீரென நீர்த்துளிகள் முகத்தில் மோத திடுக்குற்று சுய நிலையை அடைந்தான் வசந்தன். கடலலைகள் வேகமாய் வந்து அவன் மீது நீரை வாரிச் சொரிந்து கொண்டிருந்தது. மெல்ல இருள் பரவியது. கிழக்கு வானிலே பூரண சந்திரன் உதயமாகிக் கொண்டிருந்தான். 'என் உயிர் எதற்கு யாருக்காக? வெளிநாடு சென்று கஸ்ரப்பட்டு கோடிகோடியாய் சம்பாதித்தானோ அவளையும் தான் இந்த அரக்கி பறித்து விட்டாளே. இந்தக் கடலுக்குள் என்னுடலும் அழியட்டும்' என்ற நினைப்பில் கடலுக்குள்ள இறங்கினான். அப்போது ஏதோ ஒரு சத்தம் என்ன அது 'ஓ! ஒரு மழலையின் அழுகுரல்' இடிந்து போன ஒரு வீட்டின் கற்குவியலுக்குள் கேட்டது. தன்னை மறந்தவனாய் அவ்விடத்தை நோக்கி ஓடினான். ஐயோ! பச்சிளம் குழந்தை ஒன்று அதற்குள் சிக்கி குளிரிலே நடுநடுங்கி தன்னையாரும் காப்பாற்ற மாட்டார்களா? என்பது போல் அழுது கொண்டிருந்தது. அதை அப்படியே வாரி எடுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டான். அப்போது மாதா கோயில் மணி ஒலித்தது. நீ இந்தப் பிஞ்சின் உயிருக்காவது உயிரோடு வாழத்தான் வேண்டும் என்று அன்னை மாதாவே கட்டளை இடுவது போன்றிருந்தது. " கடவுளே என்னைப் போல இந்த மழலையை இப்போது அநாதையாகி விட்டதே. நானோ வளர்ந்து விட்ட அநாதை. ஆனால் இவனோ இப்போது தான் மொட்டவிழ்ந்து மலர்ந்து உலகைப் பார்க்க அடியெடுத்து வைக்கும் சின் னஞ்சிறு மலர். இனி நான் சாகமாட்டேன். இவனுக்காக வாழத்தான் போகின்றேன்'' என்று தன்னுள்ளே புலம்பிய படி இவனைப் போல் இன்னும் எத்தனை பேரை அநாதைகளாக்கினாளோ இந்தப் பாழும் கடல் அரக்கி அவர்கள் அனைவருக்கும். நான் வாழ்வளிப்பேன். நான் தேடி வந்த செல்வமெல்லாம் இனி இந்த மழலைகளின் எதிர்கால வாழ்விற்கு அத்திவாரமிடட்டும் என்ற திடமான முடிவோடு அவனது காதலின் சாட்சியாய் அழியாது நிற்கும் மாதாவின் சந்நிதியில் விடியலை நோக்கிக் காத்திருந்தான் வசந்தன்.

விடிந்ததும் கால் போன போக்கில் எங்கெல்லாமோ சுற்றி அலைந்து விட்டு ஒரு முகாமிற்கு வந்து சேர்ந்தான். அங்கே ஆயிரக் கணக்கான மக்கள் அனைத்தையும் இழந்து சோகமே உருவாக தேடுவாரின்றி அழுது புலம்பிக் கொண்டிருந்தனர். இவற்றையெல்லாம் பார்க்கும் சக்தி இல்லாது நடந்தவனின் கண்முன்னே விரிந்த காட்சி. கடவுளே! என்ன இது கனவா? நனவா? நிழலா? இல்லை நிஜம் தானா!? அவனது உயிரில் கலந்து விட்ட மேரி தலைவிரி கோலமாய் நின்று எதையோ புலம்பிக் கொண்டிருந்தாள். ஆவேசம் வந்தவன் போன்று ஓடிச்சென்று அவளின் கைகளைப் பற்றினான். ஆனால் அவளோ எந்தவித சலனமுமின்றி திடுக்குற்றவள் போல் வசந்தனை நோக்கி திருதிருவென விழித்தாள். " மேரி நான் வசந்தன் என்னை உனக்குத் தெரியவில்லையா? உன்னைத் தேடி நீ இல்லை என்றானதும் நான்பட்ட வேதனை சொல்லி மாளாது மேரி. ஒரு வார்த்தை பேசேன்" என்று படபடவென பேசிக் கொண்டேயிருந்தவனைப் பார்த்து உரக்கச் சிரித்தாள். மேரி "என்னது யாரடா நீ? எடுடா கையை வசந்தனாம் வசந்தன். மூஞ்சையைப் பாரு ஆகா! வசந்தம் வந்து விட்டதா எந்த ஊருக்குத் நீ வசந்தம் எங்கடப ஊருக்கா... ஆ?" என்று விட்டு மீண்டும் ஒரு பயங்கர பேய்ச்சிரிப்பு சிரித்தாள் வசனுக்கு ஒரு கணம் மூச்சே நின்று விடும் போல் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. " மேரி... நீ... நீ... உனக்கு..." பேச முடியாது வார்த்தைகள் தொண்டைக் குழிக்குள் சிக்கிவிட்டன. செய்வதறியாது நின்றவனைப் பார்த்து அங்கே இருந்த ஒருவர் பேசத் தொடங்கினார்.

" தம்பி நீ பணக்கார நல்ல சிவத்தோட மகன் தானே வெளிநாட்டிலிருந்து ஊருக்கு வந்திட்டியா? ஓ! உனக்கு விஷயம் தெரியாதா. அதையேன் தம்பி கேட்பான். பொங்கி வந்த கடலுக்குள் மேரியின் குடும்பம் வீடு, வாசல் எல்லாமே நாசமாய்ப் போட்டுதே தம்பி இந்தப் பிள்ளையும் கடலுக்குள் சிக்கி பெரிய பாறை ஒன்றில் தலைமோதி நினைவு தப்பிக் கிடந்தது. நாங்கள் தான் மீட்டு வந்து இப்பிடியாவது வைச்சிருக்கிறம். ஆனால் அவள்இப்போ சுயநிலையில் இல்ல. நினைவுகள் சிதறி பைத்தியமாய் விட்டாள்" என்றதும் வசந்தனோ தான் ஒரு ஆண் மகன் என்பதையும் மறந்து குமுறிக் குமுறி அழுதான். " என்னடா ஏன் கண்ணீர் வடிக்கிறாய். ஓகோ உனக்கு குழந்தை கூட இருக்கா ஆ என்ன வடிவான பேபி எனக்குத் தருவியடா" என்று வசந்தனைப் பார்த்து ஏதேதோ பேசினாள் மேரி. " கடைசி வரைக்கும் நீ இந்த நிலையில் இருந்தாக் கூட எப்பவும் எனக்கு மனைவி நீமட்டும் தான் இது சர்வ நிச்சயம்"

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போனவர்களின் வருகை



தொடர் கதை

08

● தொல்புரம் சி. கதிர்காமநாதன்

''வீட்டில தமிழில கதைச்சால் அவையள் கஷ்டப்படுவினம் நோர்வேயில, நோர்வேப் பாஷை வெளியால போனாலும் அதே பாஷை தான் பிள்ளையள் என்ன செய்யும்?'

தம்பி பரிதாபமாக என்னைப் பார்த்தார்.

''வீட்டில் நாங்கள் தமிழ் கதைக்க அவையள் சரியாகக் கஷ்டப்படுகினம், கோபமும் வருகுது 'என்னப்பா எங்களப் போட்டு குழப்புறியள், எத்தனை பாஷை யெண்டு கதைக்கிறது.' (இப்படி பேசியது நோர்வே பாஷையில்தான்) நாங்கள் பிறகு அவையளின்ரை விருப்பப்படியே விட்டிட்டம்."

குழந்தைகளின் தாய் மெல்லியதாக கூறி விட்டு மௌனமானாள்.

"நீங்கள் வெளியால போய் எவ்வளவு காலமாகுது.?"

"இருபது வருஷத்துக்கு மேல் ஆகுது - பிறகு தான் உங்கட மகன் அங்க வந்தவர்."

"பிள்ளையள் என்ன சொல்லினம் இங்க வந்த பிறகு"

"எங்கட அம்மா அப்பாவின்ரை பரம்பரை இடம் கட்டுவன். அங்க தான் நாங்கள் பிறந்து வளர்ந்த வீடு இருக்கு. அண்டைக்கு 'வீடு பார்க்க போனனாங்கள். அத்திவாரம் கிடக்கு. சொந்தக்காரர் எங்களக் கண்டு அழத் தொடங்கிட்டினம்...., அந்த இடத்தைப் பார்த்திட்டு பிள்ளையள் அழத் தொடங்கிட்டினம், பயந்து போச்சினம். இங்க நிக்கிறது அவையளுக்கு பிடிக்கேல்ல, எங்கட 'ஊருக்கு போக அவதிப்பட்டுக் கொண்டு நிக்கினம்"

மிக நீண்ட பெரு மூச்சு.

எல்லாருடைய மனங்களும் எதையோ நினைத்து அலை மோதிக் கொண்டு இருந்தன.

"எங்கட தம்பி எப்படி இருக்கிறான்.?"

'நான் இப்ப அவற்ற இடம் இல்லை. இருநூறு கிலோ மீற்றர் தூரம் தள்ளித்தான் இருக்கிறன். எப்பாவது வீட்டை போய்ப் பார்க்கிறனான். அவர் சொந்தமாய் வீடு வாங்கினவர். உழைக்கிற காசு முழுக்க அதுக்கு போய்க் கொண்டு இருக்கு. அது தான் பெரிய சிக்கல் - பிள்ளையளும் வளர்ந்திட்டினம். அந்தச் சூழலோட நாங்கள் வாழ பழகிட்டம்"

மனுசியின் கண்களில் லேசாக கண்ணீர்.

"உங்கள் ரண்டு பேருக்கும் எப்படி பொழுது போகுது?"

"ஏதோ பொழுதை போக்காட்டிக் கொண்டு இருக்கிறம்"

நேரம் போவதை உணர்ந்து அவர்கள் வெளிக்கிடத் தயாரானார்கள்.

"சரி நாங்கள் போட்டு வாறம். இதை உங்களிட்டை குடுக்க சொன்னவர்."

"என்ன தம்பி? காசோ? எனக்கேன்...."

"எண்ணிப் பாருங்கோ. பத்தாயிரம் இருக்கும்"

"தம்பி ஒரு நாளைக்கு வந்து சாப்பிட்டுப் போங்கோ"

"நேரம் வராது அம்மா"

வாசலுக்கு வந்தோம். வெளியே ஆட்கள் பார்த்தார்கள். எனக்கும் சந்தோஷமாகத் தான் இரந்தது.

நானும் மனுசியும் 'கைஸ்' போவதைப் பார்த்துக் கொண்டு இருந்தோம்.

இரவு வழமையை விட மௌனமாகக் கழிந்துகொண்டிருந்தது. மனுசி சற்று சோர்வடைந்து இருப்பது போல் தெரிந்தது.

"என்னப்பா சோர்ந்து போய் இருக்கிறீர்? இப்ப என்ன நடந்து போச்சு?"

"என்னத்தைச் சொல்லுறது. வெளிநாடு, வெளிநாடெண்டு சொல்லி என்னத்தை கண்டு நிக்கிறம்? வாற எங்கட குஞ்சுகள் எங்களோட ஆசையாய் கதைக்க மாட்டினமாம். தமிழ் தெரியாதாம். சரியா வராதாம். வேற பாஷை தான் தெரியுமாம். என்ன கொடுமையப்பா இது"

மனுசி தலையில கைவைத்தபடி சொன்னாள். தொடர்ந்தாள்.

" எங்கட பிள்ளையளும் உப்பிடித்தான் வந்து நிக்கப் போகுதுகள். கடைசிக் காலத்தில பேரன் பேத்தியேட கதைச்சு எங்கட காலம் போகு மெண்டு நினைச்சால்...."

மனுசி பெரிசாக புலம்பித் தள்ளினாள்.

(அடுத்தவாரம் தொடரும்)

# இராசி பலன்



11.09.2013 - 17.09.2013




### அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

**திறமையுடன் பணிபுரிந்து, கூடுதல் நன்மை பெறும், மேஷ ராசிக்காரர்களே!**

பணிகளில் கூடுதல் கவனத்துடன் செயல்படுவதால் மட்டுமே, நன்மைகளின் அளவு குறையாமல் கிடைக்கும். குடும்பத்திற்கான பணச்செலவில், சிக்கனம் பின்பற்றுவீர்கள். உங்களிடம் பொறாமை குணம் உள்ளவர், உதவுவது போல நடந்து இடையூறு உருவாக்குவர். கவனம் தேவை. அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் புதிய நுணுக்கம் பின்பற்றி, பணிச்சுமையை ஓரளவு குறைத்திடுவர்.




### கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

**இனிய பேச்சால், அனைவரையும் கவரும், ரிஷப ராசிக்காரர்களே!**

வாழ்வில் கூடுதல் வளம்பெற, தேவையான பணிகளை மேற்கொள்வீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த பணஉதவி, ஆலோசனை கிடைக்கும். வீடு, வாகனத்தில் விரும்பிய மாறுதல் செய்வீர்கள். உடல் நல ஆரோக்கியம் சீராக அமைந்து, மனதிற்கு உற்சாகம் தரும். இல்லறத்துணை கருத்து ஒற்றுமையுடன் நடந்து, மகிழ்ச்சிகர வாழ்வை உருவாக்குவார். இல்லறத்துணை, உங்களின் நல்ல குணத்தை உறவினர்களிடம் சொல்லி பெருமைப்படுத்துவர்.




### மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**வாழ்வியல், சூழ்நிலை உணர்ந்து செயல்படும், மிதுன ராசிக்காரர்களே!**

மனம், செயலில் புதிய உற்சாகம் ஏற்படும். அக்கம், பக்கத்தவரிடம் கருணை மனதுடன் பேசி, நல் அன்பை வளர்ப்பீர்கள். இளைய சகோதரர், வாழ்வில் முன்னேற தேவையான உதவியை மனமுவந்து வழங்குவீர்கள். புதிய வாகனம் வாங்கும் திட்டம் நிறைவேற, அனுகூலம் உண்டு. பூர்வ சொத்தில் கிடைக்கிற வருமானம் அதிகரிக்கும். எதிரியினால் தொந்தரவு வராத சுமுக சூழ்நிலை உருவாகும்.




### புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

**பணி நிறைவேற, கண்ணும் கருத்துமாக செயல்படும், கடக ராசிக்காரர்களே!**

உங்களை நன்மதிப்புடன் நடத்துகிறவர் கூட, குறை சொல்கிற மாறுபட்ட சூழ்நிலை உருவாகலாம். கூடுதல் அளவில் நேர்மை, பொறுமை குணம் பின்பற்றுவது, நற்பெயரை பாதுகாக்க உதவும். அக்கறையுடன் உடல் நலம் பேணுவதால் மட்டுமே, அன்றாட பணிகளில் ஆர்வம் வளரும். இல்லறத்துணை ஆறுதல் மனப்பாங்குடன், உங்களுக்கான உதவியை வழங்குவார்.




### மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

**நல்ல செயல்களால், குடும்பத்திற்கு பெருமை சேர்த்திடும், சிம்ம ராசிக்காரர்களே!**

மனதில் சோர்வு, செயல்கள் நிறைவேறுவதில் தாமதம் உருவாக்குவார். இருப்பினும், வாழ்வில் லட்சியங்களை உணர்ந்து, முக்கியமான பணிகளை மேற்கொள்வீர்கள். குடும்பத் தேவைகளுக்கான பணவசதி, திருப்திகரமாக இருக்கும். வீடு. இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர்கள் உங்கள் அருமை, பெருமை உணர்ந்து, கூடுதல் அன்பு பாராட்டுவர். உடல் நல ஆரோக்கியம் சீராக அமைந்து, மனதிற்கு உற்சாகம் தரும்.




### உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்

**சொந்த விருப்பங்களை, சூழ்நிலை உணர்ந்து பயன்படுத்தும், கன்னி ராசிக்காரர்களே!**

குடும்பத்தின் தேவைகளை, சிக்கன பணச்செலவில் நிறைவேற்றுவதால் மட்டுமே, பணக்கடன் பெற வேண்டிய சூழ்நிலையை தவிர்க்கலாம். உங்கள் சொல்லுக்கு வரவேற்பு இருக்கிற இடங்களில் மட்டும் பேசுவது நல்லது. உடல்நலத்திற்கு சிறு அளவிலான மருத்துவசிகிச்சை தேவைப்படலாம். இல்லறத்துணை குடும்ப பாசத்துடன் நடந்து கொள்வார். உங்கள் சொல்லுக்கு வரவேற்பு இருக்கிற இடங்களில் மட்டும் பேசுவது நல்லது.




### சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**வெற்றி பெறுவதை, லட்சியமாக எண்ணி செயல்படும், துலாம் ராசிக்காரர்களே!**

இனிய எண்ணங்கள் மனதில் உருவாகி, செயல்களை நிறைவேற்ற புது உத்வேகம் தரும். உறவினர்களின் கூடுதல் அன்பு, பாசம் கிடைக்கும். பூர்வ சொத்தில் கிடைக்கிற பணப்பலன்களை, அக்கறையுடன் பெறுவீர்கள். எதிரியினால் உருவாகிற தொந்தரவை, சமயோசிதமாக சரி செய்வீர்கள். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து குடும்ப வாழ்வை பெருமைக்குரியதாக உருவாக்குவார்.




### விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

**ஆடம்பரமாக வாழ்வதில், ஆர்வம் கொண்ட, விருச்சிக ராசிக்காரர்களே!**

சில விஷயங்களில் இருந்த சந்தேகம் நிவர்த்தியாகும். ஆன்மிக நம்பிக்கை, மனதில் கொண்டு புதிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள். ஆன்மிக நம்பிக்கை, மனதில் கொண்டு புதிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள். செயல்கள் சிறப்பாக அமைந்து, முழு அளவில நற்பலன் பெற்றுத்தரும். இல்லறத்துணை குடும்ப நலன் சிறக்க, தம்மால் ஆன பணிகளை மேற்கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.




### மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

**குடும்பத்தின் மீது அதிக பாசம் கொண்ட தனுசு ராசிக்காரர்களே!**

ஒவ்வொரு செயலும் சிறப்பாக அமைந்து, வாழ்வில் கூடுதல் வளம் பெறுவோம் என்ற நம்பிக்கையை உருவாக்கும். சமயோசிதமாக பேசி உறவினர், நண்பர்களிடம் நன்மதிப்பு பெறுவீர்கள். வீடு, வாகனத்தில் கூடுதல் பயன்பாட்டு வசதி பெற, சில மாற்றம் செய்வீர்கள். குடும்ப ஒற்றுமை சீராக இருக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து, உபரி பணவரவைத் தரும்.




### உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்

**உழைப்பு உயர்வு தரும் என்ற மன உறுதியுடன், பணிபுரியும் மகர ராசிக்காரர்களே!**

செயல்களில் ஒருமுகத்தன்மையுடன் ஈடுபடுவதால், பெறுகிற நன்மையின் அளவு அதிகரிக்கும். சாந்த குணம் கொண்ட உங்களை, சிலர் பரிகாசமாக பேசுவர். அவர்களிடம் விலகுவது நல்லது. உங்களுக்கு சில எதிர்பாராத நன்மையை பெற்றுத் தரும். உடல் நலத்தில் சீரான கவனம் கொள்வீர்கள். அத்தியாவசிய செலவுகளுக்கு கொஞ்சம் பணக்கடன் பெறுவீர்கள். இல்லறத் துணையின் கூடுதல் அன்பு, பாசம் மனம் நெகிழ வைக்கும். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும்.




### அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்

**வெற்றி, தோல்வியை சமமாக கருதும் கும்ப ராசிக்காரர்களே!**

வாழ்வில் பலகாலம் திட்டமிட்ட செயல் ஒன்றை மனஉறுதியுடன் துவங்குவீர்கள். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். சாமர்த்தியமாக பணிபுரிந்து, அதிக நன்மை பெறுவீர்கள். சிலர், புதிய வீடு வாகனம் வாங்குகிற திட்டம் இனிதே நிறைவேறும். புத்திரரின் எதிர்கால நலனுக்கு தேவையான பாதுகாப்பை உருவாக்குவீர்கள். விவகாரம் அணுகாத சுமுக வாழ்வு முறை இருக்கும்.




### பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

**நீதி, நேர்மை குணம் அதிகம் பின்பற்றுகிற, மீன ராசிக்காரர்களே!**

மனதில் திடசிந்தனையுடன் பணிகளை மேற்கொள்வது அவசியம். அடுத்தவர்பற்றி சிலர் கூறும் பொல்லாங்கு பேச்சுக்களை கேட்காமல், விலகுவது நல்லது. பணக்கடன் தருகிற நெருக்குதல் தன்மையை சமாளிக்க, குடும்ப உறுப்பினர்களின் உதவி கிடைக்கும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு முறை பின்பற்றவும். புத்திரர் தமது நண்பர்களிடம், மனக்கிலேசம் கொள்வர். உங்களின் ஆலோசனை நல்வழி நடத்தும். சீரான ஓய்வு, உடல்நலம் பாதுகாக்க உதவும். இல்லறத் துணையின் நம்பிக்கைக்கு குறைவு வராத அளவில் நடப்பது, ஒற்றுமையை பாதுகாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம் (இஸ்கோன்)

ISKCON

## ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம் கொழும்பு 13



சர்வதேச கிருஷ்ண பக்திக்கழகம் (INTERNATIONAL SOCIETY FOR KRISHNA CONSCIOUSNESS (ISKCON) இல. 188, புதுச்செட்டித்தெரு, கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் கடந்த தைப்பூசத் தினத்தன்று (27.01.2013) அழகான வேலைப்பாடமைந்த புதிய கோவில் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இனிதே நிறைவேறியது. தற்போது கட்டிட நிர்மாணப் பணிகள் நடைபெறுகின்றன.



ஸ்தாபக ஆச்சாரியார் அருட்திரு அ.ச.பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா





(புதிய கோவிலின் மாதிரித் தோற்றத்தையும், புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டல், வாஸ்து பூஜை மற்றும் தற்போது நிர்மாணப்பணிகள் நடைபெறுவதையும் படங்களில் பார்க்கலாம்)

**இல.188 புதுச்செட்டித்தெரு ஆலயத்தில் புனருத்தாரணப்பணிகள் நடைபெறுவதால், தற்காலிகமாக ஆலயத்தின் பின்பகுதியில் (இல.166, ஜம்பட்டா வீதி) வழமைபோல் பூஜைகள் மற்றும் பஜனைகள் நடைபெறுகின்றன. மேலதிக விபரங்களுக்கு இல. 171, புதுச்செட்டித் தெருவில் அமைந்துள்ள புதிய அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

"கிருஷ்ண பரமாத்மாவுக்கு அமைக்கப்படும் ஆலயத்திருப்பணியை ஆரம்பிக்கும் பக்தரின் ஏழு பிறவிக்குரிய பாவங்களும் நீக்கப்படுவதுடன் அவரின் மூதாதையரும் நரக உலகிலிருந்து மீட்சி பெறுவர்" என ஸ்கந்தபுராணம் கூறுகின்றது.

ஆலயம் அமைப்பதற்காக நிதி உதவிகள் செய்ய விரும்புவோர் பணமாகவோ, காசோலையாகவோ ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்திற் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும். வங்கிக்கணக்கில் நேரடியாகச் செலுத்த விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

| | | |
|---|---|---|
| Commercial Bank Colombo-13. | A/C Name - ISKCON Temple Fund | A/C No: 1120017042 |
| Indian Overseas Bank Colombo-01. | A/C Name - Sri Sri Radha Krishna Temple | A/C No: 0000020308 |
| Hatton National Bank, Colombo-13. | A/C Name - ISKCON Temple Fund | A/C No:207010000891 |

**ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்**

188, புதுச் செட்டித் தெரு, கொழும்பு-13.
தொ.பே. : 2433325
பெக்ஸ்: 2471099
E-mail: iskcon@slt.lk
Web: www.iskcon.lk



# விரும்பியபடி வாகனம் செலுத்துவோம்...

65 YEARS SERVICE 'Auto Court'

ஆனால் நாம் செய்யும் அனைத்து திருத்த வேலைகளும்

**இலவசம்**




- எழுத்து மூலமான ஒரு வருட உத்தரவாதம்.
- இலங்கையில் மிகக் குறைந்த விலை.
- விசேட ஒரு நாள் சேவை.
- VAT, NBT மற்றும் எந்தவொரு வரியும் அறவிடப்படமாட்டாது.

ஏன்ஜின் திருத்த வேலையின் பின் ஏதேனும் பிழையால் வாகனம் உடைந்தால்

முதலில் சந்தைகளில் விசாரித்து நாம் சொல்லியவற்றுடன் ஒப்பிட்டு பாருங்கள்... பின்பு எங்களை அழையுங்கள்...

# 077 66 33 370

நீபோரிங், நீகிரைன்டிங் மற்றும் இன்ஜெக்ரர் பம்ப் விசேட நிபுணர்கள்

# எதிரிசிங்க பிறதர்ஸ் கம்பனி லிமிடெட்

## 567, வேல்ஸ் குமார வீதி, கொழும்பு-14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கை முறிந்தது

படப்பிடிப்புக்கு புறப்படும் சமயத்தில் ஜெயம் ரவி வீட்டில் தவறி விழுந்ததால், அவரின் கை எலும்பு முறிந்தது. பூலோகம்',



நிமிர்ந்து நில்' ஆகிய இரு படங்களி
நடித்து வருகிறார். பூலோகம் பட வே
வெளியீட்டுக்குத் தயாராகிறது. இதி
இந்தப்படத்தை கல்யாண கிருஷ்ண
இயக்குகிறார். நிமிர்ந்து நில்' படத்
கனி இயக்கி வருகிறார். அமலா பா
படப்பிடிப்பு விறு விறுப்பாக நடக்கி
ரவி கீழே விழுந்து கையை முறித்து
ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை
ஜெயம் ரவி குணமடைய நடிகர், ந
செய்ததுடன், அவரையும் நலம் விச

## விஜயோடு நஸ்ரியா

ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடிக்கவிருக்கும் படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்க நஸ்ரியாவிடம் பேச்சுவார்த்தை நடக்கிறது.

கேரளாவில் இருந்து வந்துள்ள நஸ்ரியா தமிழ் சினிமாவில் படுவேகமாக வளர்ந்து வருகிறார். நேரத்துக்கு படப்பிடிப்புக்கு வருவதில்லை என்று

கூறப்பட்ட போதும், நஸ்ரியாவுக்கு வாய்ப்புகள் வந்து குவியத் தான் செய்கிறது.அதுவும் வாய்ப்புகள் அனைத்தும் முன்னணி நடிகர்களுடனாம்.

நஸ்ரியாவின் வளர்ச்சியை கண்டு முன்னணி நடிகைகள் பலரும் ஆடிப் போயுள்ளார்கள்.தனுஷ் நடிக்கும் நய்யாண்டி படத்தில் அவருக்கு ஜோடியாக நடிப்பவர் நஸ்ரியா தான். நீ நல்லா வருவடா' என்ற படத்தில் ஜீவாவுக்கு ஜோடியாகவும் நடிக்கிறார் நஸ்ரியா.இந்தநிலையில் தான் நஸ்ரியாவுக்கு திடீரென விஜயுடன் நடிக்கும் அதிர்ஷ்டம் கிட்டியுள்ளது. ஜில்லா படத்தை முடித்துவிட்டு ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்கிறார் விஜய்.அதில் அவருக்கு ஜோடியாக நடிக்குமாறு நஸ்ரியாவிடம் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்களாம். நஸ்ரியாவும் உடனேயே சம்மதித்து விட்டார்.





## ஆர்யாவை

கன்னடத்து
ஷிவானி
இந்தப்பட
வருகிறது.
திருப்தியாக
நான் சொல்ல
வேண்டும்.
இரவில் தனிய
அச்சம் பே
திரியும் மிரு
தொட

என் மனம்
அழுகிற
பொதுவான
என்றுதான்
ஆர்யாதான்
தொடர்ந்து
இணைந்
ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலியா? மனைவியா?

தனது முன்னாள் காதலியுடன் நடிப்பதில் தயக்கம் காட்டி வருகிறாராம் அமிதாப்பச்சன்.வெல்கம் பேக் என்ற ஹிந்திப் படத்தில் நடிக்கிறார் அமிதாப் பச்சன். இதில் ஜோன் ஆப்ரகாம் ஜோடியாக ஸ்ருதி ஹாசன் நடிக்கிறார்.
அமிதாப்புக்கு ஜோடியாக நடிக்க ஜெமினி கணேசனின் மகளும் முன்னாள் கதாநாயகியுமான ரேகாவிடம் பேசப்பட்டது.இதற்கு ரேகா சம்மதம் தெரிவித்துவிட்டாராம். ஆனால் தனக்கு ஜோடியாக ரேகா நடிப்பதில் அமிதாப்புக்கு விருப்பம் இல்லை என்று கூறப்படுகிறது.
காரணம் ரேகா அமிதாப்பின் முன்னாள் காதலியாம். இயக்குனர் அனீஸ் பாஸ்மி ரேகாவை நடிக்க வைக்கலாமா என கேட்டபோது அமிதாப் அமைதி காத்தாராம். முன்னாள் காதலியுடன் நடிப்பது தனது மனைவி ஜெயாவுக்கு பிடிக்காது என்பதாலேயே அமிதாப் அமைதி காப்பதாக சொல்லப்படுகிறது.



சினிமா

...களில் ஜெயம் ரவி
...வலைகள் முடிந்து படம்
...தில் நாயகி த்ரிஷா.
...ணன்
...த்தை சமுத்திரக்
...பால் நாயகியாக நடிக்கிறார். இதன்
...க்கிறது. இந்த நிலையில் ஜெயம்
...துக் கொண்டு உள்ளார். அவருக்கு
...ட்டு உள்ளது.
நடிகைகள் பலர் பிரார்த்தனை
விசாரித்து வருகின்றனர்.



## காரைக்குடியில் நயன்

தயாரிப்பாளராக இருந்து நடிகராகவும் மாறிய உதயநிதி ஸ்டாலின் தற்போது நடித்துக் கொண்டிருக்கும் படம் இது கதிர்வேலன் காதல். சுந்தரபாண்டியன்' படத்தை இயக்கிய எஸ்.ஆர். பிரபாகர் இயக்கி வரும் இந்தப்படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு காரைக்குடியில் நடைபெற்று வருகிறது.இதில் கலந்து கொள்ள உதயநிதியுடன் காரைக்குடிக்கு சென்றுள்ளார் நயன்தாரா. நயன்தாரா இந்தப்படத்தில் பவித்ரா என்ற கதாபாத்திரத்தில் நடுத்தர குடும்பத்து சாதாரண பெண்ணாக நடிக்கிறார். வேலையில்லாத இளைஞராக வரும் உதயநிதி மதுரைக்குச் செல்லும்போது இவரை பார்த்து காதலில் விழுகிறார். இதுதான் படத்தின் கதை என்று கூறப்படுகிறது.



# அழகின் ரகசியம் என்ன?

தற்போது ஷங்கர் இயக்கும் ஐ படத்தில் விக்ரமுக்கு ஜோடியாக நடித்து வருகிறார் ஆங்கிலப்பைங்கிளி எமி ஜாக்சன்.பார்ப்பதற்கு அழகான எடையோடு இருக்கும் எமி தனது உடலழகின் ரகசியம் குறித்து மனம் திறந்து கூறுகிறார். எனது உடற்பயிற்சிகள் வெவ்வேறு விதமானவை.ஜிம்முக்கு போவது எனக்குப் போரடிக்கும். தவிர எடையை, எந்திரங்களை தூக்குவது எனக்குப் பிடிக்காது.நான் விளையாட்டை விரும்பும் குழந்தையாகவே வளர்ந்து வந்திருக்கிறேன்.நான் படித்த லிவர்பூல் செயின்ட் எட்வர்ட்ஸ் கல்லூரியில் விளையாட்டு, பாடத்திட்டத்தின் ஓர் அங்கமாகவே இருந்தது. தடகளம், ஹொக்கி, கால்பந்து, நீச்சல் என்று எல்லாவற்றிலும் நான் ஈடுபட்டேன். மேலும் எனது நாளை அரை லிட்டர் தண்ணீருடன் தொடங்குகிறேன். அது என் உள்பகுதியை சுத்தமாக்கி, புத்துணர்வான உணர்வை ஏற்படுத்துகிறது.ஒரு பழச்சாறுடன் மிதமான காலைச் சிற்றுண்டி சாப்பிடுவேன். காலை உணவுக்கும் மதிய உணவுக்கும் இடையில் கொஞ்சம் கொஞ்சமாக மூன்று முறை சாப்பிடுவேன். அதில் சூப், சாலட், பாதாம், முந்திரி பருப்புகள், அப்பிள் போன்றவை இடம்பெற்றிருக்கும்.இரவில் காய்கறிகள் அல்லது மீன் மட்டும் தான். உள்ளே போகும் கார்போஹைட்ரேட் அள வில் மட்டும் நான் கவனமாயிருப்பேன்.மேலும் தூங்கப் போவதற்கு முன்னால் ஒரு கிளாஸ் சூடான பால் குடிப்பேன். அந்தப் பால்தான் என்னை நிம்மதியாகத் தூங்க வைக்கும் என்கிறார் இந்த ஆங்கிலத் தேவதை

## வாலியாகும் அஜித்



'நாடோடிகள்' அபிநயா இப்போது 'வீரம்' படத்தில் விதார்த் ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். வாய் பேச முடியாத அபிநயா விடம் 'வாலி' படத்தில் பேசுவதுபோல், படப்பிடிப்புத் தளத்தில் பேசி மகிழ்கிறாராம் அஜித்!

# ...வைப் பிடிக்கும்

...து நடிகையான காவ்யா ஷெட்டி, தமிழில்
...ணி' என்ற படத்தில் நடித்து வருகிறார்.
...படம் திகில் நிறைந்த படமாக உருவாகி
...து. இந்தப்படத்தில் என்னுடைய நடிப்பு
...க இருந்தது. ஷிவானி' படத்தின் கதையை
...ல மாட்டேன். ஆனால் ஒன்று சொல்லியாக
...ம். இயல்பாகவே நான் பயந்த பெண்தான்.
...ரியாக செல்ல இன்னமும் அச்சம்தான். அந்த
...பேய், பிசாசினால் அல்ல. மனித உருவில்
...ிருகங்களால்தான். பெண்களுக்கு எதிராக
...டரும் வன்கொடுமைகள் மனதைக்
காயப்படுத்துகின்றன.
...ம் மும்பை பெண் புகைப்பட நிருபருக்காக
...றது. என் கருத்தின்படி சினிமா உலகம்
...ான சமுதாய உலகைவிட பாதுகாப்பானது
...ன் கருதுகிறேன் . எனக்குப் பிடித்த நடிகர்
...ான்.காவ்யா ஷெட்டி ஷிவானி' படத்தைத்
...ந்து அட்டக்கத்தி' நாயகன் தினேஷுடன்
...ந்து வாராயோ வெண்ணிலவே' என்ற
படத்திலும் நடித்து வருகிறார்.

# பிரபுதேவாவுக்குச் சிலை

பிரபுதேவாவுக்கு ஹிந்தி ரசிகர்கள் மெழுகுச் சிலையை உருவாக்குகிறார்கள். பிரபுதேவா ஹிந்தியில் முன்னணி இயக்குநர்களில் ஒருவராகிவிட்டார். ஹிந்தியில் அவர் இயக்கிய ரவுடி ரத்தோர்', ராமையா வஸ்தாவையா' படங்கள் வெற்றிகரமாக ஓடின. தற்போது அஜய்தேவ் கான், சல்மான்கான் நடிக்கும் பெயரிடப்படாத இரு படங்களை இயக்குகிறார்.
ராம்போ ராஜ்குமார்' என்ற ஹிந்திப் படமும் கைவசம் உள்ளது. இவரே தனது படங்களுக்கு நடன இயக்குநராகவும் பணியாற்றுகிறார். பிரபுதேவா நடனத்துக்கு ஹிந்திப்பட உலகில் பெரும் ரசிகர் பட்டாளம் உள்ளது. அவர்களே இந்த மெழுகு சிலையை உருவாக்குகிறார்கள்.
லண்டன் அருங்காட்சியகத்தில் உள்ள அமிதாப்பச்சன், சச்சின், ஷாருக்கான், ஐஸ்வர்யா ராய் போன்றோரின் மெழுகுச் சிலைகளுக்கு இணையாக பிரபுதேவாவின் சிலையும் தயாராகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீங்கள் ரியூசன் ரீச்சரா?

பெண் கல்வி அவசியம் என்று அறிவுரை கூறி பெண்களைக் கல்வித்துறையில் கணிசமான அளவு உள்வாங்கி விட்டோம். ஆனால் இன்று அதிகமான சகோதரிகள் தமது பட்டப்படிப்பின் பின்னர் தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. சில சகோதரிகள் திருமணத்தின் பின்னர் தொழிலிற்கு வெளியே செல்வதால் குடும்பத்தைச் சரியாகக் கவனிக்க முடியாது என்றும் கூறுகிறார்கள்.

நீங்கள் வீட்டிலிருந்தபடியே வருமானத்தையும் மதிப்பையும் பெற்றுக்கொள்ள விரும்பினால் வீட்டிலேயே வகுப்புக்கள் நடாத்தலாமே. 'அட இவ்வளவு தானா ..?' என்று எண்ணிவிடாதீர்கள். சரியான முறையில் நீங்கள் முயற்சித்தால் அதிக மதிப்பும் வருமானமும் உங்கள் சமூகத்திலிருந்து உங்களைத் தேடிவரும். அதற்கு என்ன செய்யவேண்டும்? புதிதாக வகுப்புக்களைத் தொடங்க நினைப்பவர்களிற்கும் ஏற்கனவே இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பவர்களிற்கும் சில தகவல்கள்.

- முதலில் உங்களுடைய சிறப்புப்பாடம் என்ன என்பதை கவனத்திற்கொண்டு அதற்கேற்ப பாடங்களை வகுப்பெடுக்கத் தீர்மானியுங்கள்.குறிப்பிட்ட பாடத்தின் அடிப்படைகளை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்.
- ஆரம்பத்தில் தரம் ஆறு தொடக்கம் ஒன்பது வரையான மாணவர்களிற்கான வகுப்புக்களைத் தயார் செய்யுங்கள். அவர்களிற்கு உங்களால் சிறப்பாக கற்பிக்கமுடியும். தவிர மேல்வகுப்புக்களிற்கு கற்பிக்க உங்களிற்கும் அனுபவம் வரவேண்டுமல்லவா?



- எடுத்த எடுப்பிலேயே வகுப்பில் பின்னிலையிலுள்ள மாணவர்களை இணைத்துக்கொள்ளலாமா.. இல்லையா என்பதை உங்களினுடைய பொறுமைக்கும் திறமைக்கும் ஏற்ப முடிவெடுத்துக்கொள்ளுங்கள்.
- அயலிலுள்ள கல்வி நிலையங்களில் கட்டணமாக எவ்வளவு பெற்றுக்கொள்கிறார்கள் எனவும் பெற்றோர்களின் பொருளாதார நிலை பற்றியும் அறிந்துகொண்டு கட்டண அளவைத் தீரமானியுங்கள்.
- மாணவர்கள் வருகின்ற நேரம் வீடுதானே என்றுவிட்டு சாயம் போன ஆடையுடனோ அல்லது தலை வாராமலோ இருக்காது பார்ப்பதற்கு நேர்த்தியாக இருங்கள்.
- பாடங்களிற்கு இடைநடுவே சமையல் வேலையைக் கவனிப்பதைத் தவிருங்கள்.
- திறந்தநூற் பரீட்சை, நினைவூட்டற் செயற்பாடுகள் போன்றவற்றால் மாணவர்களின் சுமையைக் குறைத்து ஞாபக சக்தியை அதிகப்படுத்துங்கள்.
- பாடசாலைகளில் கொடுக்கின்ற வீட்டுப்பாடங்களில் இருக்கின்ற சந்தேககங்களையும் தீர்த்துவையுங்கள்.
- பாடசாலைகளில் கொடுக்கின்ற கல்வி வளர்ச்சி அறிக்கைகளையும் கவனத்திற்கொள்ளுங்கள்.
- மாணவர்களைக் கொண்டுவந்து விடுகின்ற பெற்றோருடன் மதிப்பாக நடந்து கொள்ளுங்கள். வீண் அரட்டைகளைத் தவிர்ப்பது நல்லது.
- வகுப்புக்கள் நடக்கின்ற இடத்தில் தொலைக்காட்சி,வானொலிப்பெட்டிகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.
- வீட்டு உறுப்பினர்களின் அதிக இடையூறு இல்லாத இடமாகவும் இருந்தால் நல்லது.

இவ்வழிமுறைகளைக் கவனத்திற்கொண்டால் உங்களினுடைய மாணவர்களும் கல்வியில் பிரகாசிப்பதனை உண்மையாக்க முடியும்.

நீங்களும் கைநிறையச் சம்பாதிக்கலாம்.



## டொரதே லன்ஜ்

## 'கமெராப் பெண்'

நியூயோர்சியில் 1895 மே மாதம் இருபத்து ஆறாம் திகதி பிறந்த டொரதே லன்ஜ் நிழற்படக்கலையில் சிறுவயது முதலே ஆர்வம் மிகுந்தவராக இருந்தார். இளம் பராயத்திலிருந்து இவரிடம் காணப்பட்ட ஆர்வம் அவரைப் புகைப்படத்துறையில் முத்திரை பதித்த ஒருவராக மாற்றக் காரணமாயிருந்தது. தன்னுடைய உயர்கல்வியைக் கொலம்பிய பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டார்.

இவருடைய முதலாவது புகைப்படக் கண்காட்சியானது 1934 ஆம் ஆண்டு நடைபெற்றது.1940ஆம் ஆண்டிலிருந்து அனுபவம் பெற்ற புகைப்படக் கலைஞர்களில் சிறப்பிடம் பெறுகின்ற பெண் இவராவார். இரண்டாம் உலகமகாயுத்தத்தின் வடுக்களை பதிவுசெய்ததில் உலகில் பரவலாக அறியப்பட்ட இவர் உலக பெண் புகைப் படக்கலைஞர்களில் முக்கியமானவர ஆவார்.

# புதுயுகத்தைத் தேடி......

**மகளிர் பக்கம்**

தொகுப்பு: ஸ்ருதி

## முதல் எதிரி முகப்பரு..!

இப்போதெல்லாம் எங்கள் சகோதரிகளுக்கு தமது கல்லூரி வட்டத்திற்குள்ளோ அலுவலகத்திலோ நண்பர்கள் இருக்கிறார்களோ இல்லையோ முகப்பருக்கள் முக்கிய எதிரிகளாவிட்டன. ஒருபருவை முகத்தில் கண்டுவிட்டாலே எல்லாவேலையையும் விட்டுவிட்டு அதைப்பற்றியே கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக எத்தனையோ இரசாயன அல்லது மருத்துவ முறைகளையும் நாடுகிறார்கள். ஆனால் உண்மையில் இவற்றையெல்லாம் விட மிகவும் எளிமையான ஆரோக்கியமான முறைகள் எத்தனையோ இருக்கின்றன. உங்களிற்கு முகப்பரு மற்றும் அடையாளங்கள் இருக்கிறதா? கவலையை விடுங்கள். முகப்பருவை சமாளிக்க இதோ சில இயற்கைமுறைகள்..

* சுடுநீரினை ஒரு பாத்திரத்தில் இட்டு அதன் ஆவியை முகத்தில் பிடியுங்கள். இதனால் முகத்திலிருக்கின்ற பழைய கலங்கள் (இறந்த கலங்கள்) இலகுவாக வெளியேறிவிடும். ஆவி பிடித்து முடிந்ததும் ஒரு சுத்தமான துணியால் முகத்தைத நன்றாகத் துடைத்துவிடுங்கள்.

* ஐந்து நிமிடம் முதல் பத்து நிமிடம் வரை ஆவி பிடிக்கின்ற போது முகத்திலுள்ள கரும்புள்ளி மற்றும் வெள்ளைப் புள்ளிகளும் நீங்கிவிடும். பின்னர் அவை மீண்டும் வருவதற்கான வாய்ப்புக்குறைவு.

* பருக்கள் இருப்பவர்கள் நான்கு முதல் ஐந்து நிமிடங்களிற்கு ஆவி பிடிக்கலாம். இதன் மூலம் முகத்திலுள்ள இயற்கையான எண்ணெய்த் தன்மை சமன் செய்யப்படும். பருக்கள் தோற்றமும் குறைந்துவிடும். பருக்கள் உள்ளவர்கள் இவ்வாறு ஆவி பிடித்து பின்னர் அரை மணித்தியாலயம் கழித்து குளிர்ந்த ஐஸ்கட்டிகளால் முகத்தைக் கழுவினால் பருவினை ஒரே நாளில் குறைத்து விடலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு வந்த எலெக்ஸன் ஆசை!

என்னைக் காணுற எல்லாரும், "உன்ரை அறிவுக்கும் ஆற்றலுக்கும் நீ ஏன் ஒரு முறையும் எலக்ஸன் கேக்கிறதில்லை பரமசிவம்?" என்று விசாரித்தபடிதான்.

அது அதுக்கெண்டு ஒரு தகுதி வேணும். முந்தித்தான் எலக்ஸன் கேக்க கொள்கை அது இது எண்டு தேவை. அந்தக் கொள்கைகளுக்காகவே எலக்ஸன் கேக்கிறவை. இப்ப அப்பிடிக் கஸ்டம் இல்லை. ஒரு பக்கம் நிண்டு நொமினேசன் கட்டிப் போட்டுத் தான் அவையின்ரை கட்சிக் கொள்கை என்ன? அல்லது அவையின்ரை கட்சிக்கு அல்லது குழுவுக்கு எண்டு ஒரு கொள்கை இருக்குதா? அது இதெல்லாம் பார்க்கிறது.

எனக்கும் ஒரு ஆசைதான். அப்பிடி இப்பிடி எலக்ஸன் கேக்கிறதுக்கு. ஆனால் ஒருத்தரும் என்னட்டை வந்து கெஞ்சி மன்றாடி "நீங்களும் எலக்ஸன் கேளுங்கோ" எண்டு என்னைக் கேட்காதது ஒரு மனக் குறைதான்.

எனக்கும் அவ்வளவு பெரிசா எலக்ஸன் கேக்கவேணும் எண்ட ஆசை இல்லைத் தான். ஆரும் தங்கடை செலவிலை நொமினேசன் கட்டி கேட்கச் சொன்னால் கேட்கிறதிலை தப்புமில்லைத்தான். ஆனால் எலக்ஸன் கேட்டால் சும்மா கண்ட பாட்டிற்கு ஒவ்வொருத்தரின்ரை காலுக்கையும் மிதிபட வேணும் கண்டியளோ. அல்லாமலும் சில வாகனங்களும் உழக்கி மிதிச்சுக் கொண்டு போறாங்கள். எங்கடை பேரும், சின்னமும் நடு றோட்டிலை எழுதி வரைஞ்சு கிடக்குது. கொஞ்சம் விலகிப் போவமெண்ட மனேஸ் கொஞ்சமும் இல்லை. உது களைப் பார்க்கேக்கை எலக்ஸனிலை நிற்காமல் விட்டதும் நாலு பேரின்ரை காலுக்கை உழக்குப்படா மல் விட்டதும் நல்லது போல கிடக்குது.



எலக்ஸனிலை நிக்கிறாக்களைப் போட்டு, எதிர்த்து நிக்கிறாக்கள் கிழி கிழி யெண்டு கிழிக் கிறதுகளை விட, இப்ப பொது மக்களுமெல்லே கண்ட பாட்டுக் குக் கிழிக்குதுகள்.

புது மதில் பார்த்து, நல்ல வர்ணப் பூச்சு மதில் பார்த்து, நேட்டிஸை ஒட்ட, வீட்டுக்காரர் கேட்டுக் கேள்வி இல்லாமல் கிழிக்குதுகள். கூப்பன் மா வாங்கி, தடிப்பாய்ப் பசை காய்ச்சி, ஆக்களுக் குக் கூலி கொடுத்து ஒட்டிவிச்சு விட , மதில் காரர் தங்கடை எண்ணத்துக்கு அதைப் போட்டுக் கிழிக்குதுகள். நோட்டீஸ் செலவென்ன? அச்சடிச்ச கூலியென்ன? இதை யொன்றும் விளங்காமல், நோட்டீஸைக் கிழிச்சால் கோபம் வருமோ? வரோதோ?

உதுகளைப் பார்க்க எலக்ஸனிலை நிக்காதது நல்லது போலத்தான் படுகுது. அப்பிடியிருந்தும் எலக்ஸனிலை நிக்கிற போஸிலை கொஞ்சப் படம் எடுத்தனான். கடைசி நேரத்திலை ஆராவது வந்து நீங்களும் எலக்ஸனிலை நில்லுங்கோ, எண்டு கேட்பீனம் எண்ட நப்பாசையிலை விதம் விதமான போட்டோக்கள் எடுத்தனான் தான். போஸ்காட் சைஸ், ஐசி சைஸ் அதுகள் சரிவராது எண்டு கபினற் சைஸிலை கொஞ்சப் போட்டோ எடுத்தனான். அதுகளைக் கண்டிட்டு ஆரவோ "பம்பல் பரமசிவம் அண்ணையும் எலக்ஸனிலை காலடி எடுத்து வைச்சிட்டார். இனி நமக்கு விடிவுதான்" எண்டு சொல்லிக்கொண்டு திரிஞ்சதை கொஞ்சப் பேர் நம்பிவிட்டினம்.

'பம்பல் பரமசிவம் எலக்ஸன் கேட்டால் அவர் விடயம் எழுத நேரமில்லாமற் போய்விடும். நாம் கொஞ்சம் நிம்மதியாயிருக்கலாம். இலக்கியத் தரம் பேணப்படும். இலக்கிய உலகிற்கு இனித்தான் விடிவு' எண்டு சிலபேர் நம்பியிருக்கலாம். ஆனால் இந்தப் பரமசிவமே விடுகிற ஆள்? தற்செயலாக எலக்ஸன் கேட்டிருந்தாலும் எழுத் துப் பணியை நிறுத்தியிருக்க மாட்டன். இந்தப் படங்கள் எடுத்ததைப் பற்றிச் சொல்லிப் போட்டு விட்டிட்டன். நல்ல போட்டோகிராப்பரைப் பிடிச்சு, நல்ல வடிவாகத் தான் எலக்ஸ னுக்கு உதவுமெண்டு போட்டோஸ் எடுப்பிச்சனான். அந்தப் போட்டோகிராப் பரைத்தான் இங்கத் தையில் புறோக்கர்மார், வெளிநாட்டுக்கு அனுப்புகிற படங்கள் பிடிக்க கூப்பிடு கிறவை. பெரிய சைஸிலைதான் பிறின்ற் பண்ணுவிச்சனான். தற்செயலாக டிக்கற் கிடைச் சால் நோட்டீஸ்சுக்கு உதவுமெண்டு. டிஜிற்றலிலை சின்னதாக எடுத்துட்டுப் போட்டுப் பிறகு பெரிப்பிச்சால் படம் ஏதோ உடையுமோ ஏதோ எண்டு சொல்லு றாங்கள். ஏன் உடைவான்? முன்னமே பெரிசா படத்தை எடுப்பம் எண்டு எடுப்பிச்சிட்டன்.

கும்பிட்டுக் கொண்டு நிக்கிற படங்கள்தான் கூட. அதைப்பார்த்திட்டு என்ன பரம சிவம்பிள்ளை அண்ணை. இரண்டு கைகளையும் தலைக்கு மேலாக உயர்த்திக் கொண்டு நிக்கிறியள். நல்ல ஸ்ரைலாகஇருக்குது. தத்ரூபமாக இருக்குது. ஏதோ விறகு கொத்துற ஸ்ரைலிலை நிக்கிறியள். ஆனால் கையிலை கோடாலி ஒண்டு, இல்லாதது ஒரு மாதிரிக் கிடக்குது. தலைக்கு மேலை உயர்த்தின கைகளிலை ஒரு பொல்லுக் கட்டை இருந்தாலும் பரவாயில்லைப் போல கிடக்குது. பாம்படிக்க கையை உயரத் தின மாதிரி இருக்கும். இது சப்பெண்டு கிடக்குது. முக எக்ஸ்பிறசனும், ஸ்ரைலும் சரி. ஆனால் கையிலை ஒன்றுமில்லாததால் ஏன் கையை உயர்த்திக்கொண்டு நிக்கிறியள் எண்டுறதை 'ஜட்ஜ்' பண்ண ஏலாமல் கிடக்குது' வந்தவரின்ரை உந்தக் கதை யோடை நான் கொஞ்ச நஞ்சமிருந்த எலக்ஸன் கேக்கிற ஆசையையும் விட்டிட்டன்.

**பம்பல் பரமசிவம்**

உண்மைச்சம்பவம்

# புதைமணல் பயங்கரம்

■ ஜெகன்

தென் சுவீடனில் கோல்பர் நகரை அண் டிய ஒருகிராமத்தில் உள்ள காட்டுப் பகுதியில் தான் ஆஷ்லியின் வீடு. காட்டிலாகாவில் சேவையாற்றி இப்போது ஓய்வுபெற்றுத் தனது மனைவியுடன் சேர்ந்து காட்டிலுள்ள வீட்டில் வசித்து வருகிறார். அந்தக் காட்டுப்பிரதேசம் அவருக்கு அத்துப்படியானதொன்று.

வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக இடையிடையே கோல்பார் நகரத்திற்கு அவர் சைக்கிளில் சென்று வருவதை அவர் வழக்கமா கக் கொண்டிருந்தார்.

செப்ரெம்பர் மாதம் மாலைவேளை. அன் றும் ஆஷ்லி வீட்டிற்குத் தேவையான பொருட் களைக் கொள்வனவு செய்துவிட்டு வீட்டை நோக்கி வழமையாகச் செல்லும் காட்டுப் பகுதியின் குறுக்குப் பாதையினூடாகச் சென்று கொண்டிருந்தார்.

அடர்ந்த காட்டினூடாகச் செல்லும் குறுக் குப் பாதையில் காட்டுமரங்களின் வேர்கள் தரைமட்டத்திற்கு மேலாக அங்கொன்றும் இங் கொன்றுமாக தலையை நீட்டிக் கொண்டிருந் தன. மாலை நேரத்துச் சூரியனின் மங்கிய ஒளியும், காட்டுமரங்களின் நிழலும் பாதையில் இடையிடையே வெளியில் நீட்டிக் கொண் டிருந்த வேர்கள் ஆஷ்லியின் பார்வைக்குத் தெளிவாகத் தெரியவில்லை.

திடீரென எதிர்பாராத விதத்தில் மரநிழல் களின் இருட்டில் ஆஷ்லியின் சைக்கிள் பெரிய வேர் ஒன்றோடு முட்டி மோதியது. ஆஷ்லி யின் கைகள் தாமாகவே சைக்கிளின் பிடியி

**"ஆஷ்லியின் உடம்பு இடுப்பு வரை மணலில் புதைந்து விட் டது. மரக்கிளையைப் பற்றி யிருந்த கைகளும் வலிக்கத் தொடங்கியிருந்தன. ஆஷ்லியும் தான் பலவீனமடைவதாக எண்ணினார்".**



லிருந்து நழுவின. அவர் சில அடிகள் தூரம் தூக்கி வீசப்பட் டார். கொண்டு வந்த பொருட்களும் சிதறி வீழ்ந்தன.

கடவுள் புண்ணியத்தால் ஆஷ்லியின் உட லில் ஒருஅடிகூடப் படவில்லை. அவர் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டார். அவர் விழுந்தஇடத்தில் மண் பஞ்சு மெத்தைபோல் இதமாக இருந்தது. அவரது போதாத காலம். அவர் எழுந்திருக்க முயன்ற சமயத்தில் அவ ருக்கு உண்மை புரிந்தது. அது புதை மணல். ஆல்ஷி அதற்குள் மெல்ல மெல்ல புதைந்து கொண்டிருந்தார். முதலில் அவர் தனக்கு ஏற் பட்டுள்ள அபாயத்தை அறவே உணரவில்லை. அவருடைய கவலையெல்லாம் சைக்கிளுக்கு ஒன்றும் ஆகாமலிருக்க வேண்டும், வயதான மனைவி தேடுவாளே என்பதும் தான்.

கால்களை மண்ணிலிருந்து வெளியே எடுக்க முடியாது என்பதை உணர்ந்தார். மனதில் பீதி குடி கொள்ள ஆரம்பித்தது. மாலை இருளும் அப் பகுதியைச்சிறிது சிறிதாக ஆக்கிரமித்துக் கொண்டி ருந்தது.

அப்படியே இருந்த நிலையில் அவர் தலையை மேலே தூக்கிப் பார்த்தபோது சற்று அருகே நின்றிருந்த மரத்தின் கிளையொன்று தென்பட் டது. சட்டென்று அக்கிளையைக் கைகளினால் பற்றிக் கொண்டார். கிளையின் உதவியால் தப்பி மேலே வந்துவிடலாம் என்று நம்பினார். அவரது நம்பிக்கை வீணாயிற்று. உயிரைக் காப் பாற்றிக் கொள்ள மரக்கிளையை ஆதாரமாகக் கொண்டு, அதைப் பிடித்துக் கொண்டிருக்க மட்டுமே அவரால் முடிந்தது.

உதவிகோரி அந்தப் பகுதியால் செல்வோரின் கவனத்தை ஈர்ப்பதற்கு கூப்பாடு போட் டார். ஒருபதிலும் கிடைக்வில்லை, மாலை நேர மாதலால் யாரும் அந்தப் பக்கம் வரு வார்கள் என்று அவர் எதிர்பார்த்திருக்கவும் முடியாது. நல்ல பகல் வேளையில் மாத்திரம் அடுத்த கிராமத்தை அடையச் சிலர் அந்தக் காட்டுப்பாதையைக் குறுக்கு வழியாகப் பயன்படுத்துவார்கள் என் பதும் மற்றம்படி ஆள் அரவமே இருக்காது என் பதும் அவருக்கு நன்கு தெரியும். (தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

ஒளண்யன்

# இருளின் கதவுகளைத் திறந்தவன்




**வா**ழ்க்கையின் இடைவிடாத துரத்தல்களால் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறிய பின்னர் அங்கு செல்வதையே யூலியன் வெறுத்தான். அதைவிட யூலியன் அங்கு சென்றால் எப்படியாவது ஒரு வழக்கினைச் செட்டப் செய்து அவனை உள்ளுக்குள் தள்ளிவிட. நாவைத் தொங்கப்போட்டுக் கொண்டு அவுஸ்திரேலியாவும் காத்திருந்தது. ஆனால் சட்டத்துக்கு முரணான ஊடகங்கள் என்ற லேபிளை ஒட்டிவிட்டு, அதன் மறைவில் தனக்கு எதிரான சில ஊடகங்களின் கழுத்தை அறுக்கவே அவுஸ்திரேலியா இப்படி ஒரு வேலையைச் செய்வதை யூலியன் ஊகித்துக் கொண்டான். யூலியன் ஊகித்தால் மட்டும் போதாதே. தனது ஊகத்தை தகுந்த ஆதாரங்களோடு வெளிக்கொணர்ந்து, அவுஸ்திரேலியாவின் ஊடகச்சுதந்திரம் என்ற அரிதாரத்தைக் கழுவி அதன் கோரப்பற்களை உலகுக்கு காட்டவேண்டும். உடனடியாக ஏதாவது செய்ய வேண்டும் என்று அவன் பரபரத்தான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக விக்கிலீக்ஸுக்கு அவுஸ்திரேலியாவில் சரியான - துணிச்சலான -தகவல் வழங்குபர்களும் இல்லை. யூலியனின் நண்பர்கள் எப்போதுமே அவுஸ்திரேலியாவின் கண்காணிப்பு வளையத்துக்குள்ளேயே இருந்ததனால் வேறு ஒரு வழியையே யூலியன் நாட வேண்டியிருந்தது.

அப்படி யூலியன் நாடிய நபர்தான் தியோடர். ஜேர்மனியனையச் சேர்ந்த தியோடர் யூலியனைப்போலவே அதிகாரத்தின் முகமூகமூடியைக் கிழித்தெறிய, இணைய ஊடகப்புரட்சி ஒன்றே எதிர்காலத்துக்குப் பொருத்தமானது என நம்பும் இளைஞர். எனவே யூலியனின் கொள்கைகள் மீதும், விக்கிலீக்ஸின் செயற்பாடுகள் மீதும் தியோடருக்கு பிடிப்பு ஏற்பட்டதில் ஆச்சரியமேதுமில்லை. விக்கிலீக்ஸ் தொடங்கப்பட்டதிலிருந்தே யூலியனுடன் கைகோர்த்த தியோடர், அதன் ஜெர்மன் தளத்தின் சொந்தக்காரராகவும் இருந்தார். யூலியனின் வேண்டுகோளின் படி, தனது வியாபார நடவடிக்கையின் பொருட்டு செல்வது போல அவுஸ்திரேலியவுக்குள் நுழைந்தார். யூலியனின் சீடப்பிள்ளையான தியோடருக்கு உளவறிய யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லையே. மீன் குஞ்சு அவுஸ்திரேலிய தகவல்துறை ஆவணங்களுக்குள் நீந்தத் தொடங்கியது. நோகாமல், நொருங்காமல் தேவையான தகவல்களை ஆதாரங்களோடு திரட்டி சூட்டோடு சூடாக யூலியனுக்கு பாதுகாப்பான வழிமுறையூடாக அனுப்பினார் தியோடர். தனது வேலையை முடித்துக் கொண்டு தியோடர் பத்திரமாக ஜெர்மனியில் தரையிறங்கும் வரை காத்திருந்த யூலியன், அதன் பின் அவுஸ்திரேலியாவின் மறைமுக ஊடகஒடுக்குமுறையை உலகெங்கும் பறை தட்டினான். நாலாபுறத்திலிருந்தும் கேள்விக் கணைகள் அவுஸ்திரேலியாவைத் துளைதெடுத்தன. இறுதியில் சட்டவிரோத இணையங்கள் என்ற போர்வையில் தனக்கு எதிரான ஊடகங்கள் சிலவற்றையும் முடக்க திட்டமிட்டிருந்ததை அவுஸ்திரேலியா ஒத்துக் கொண்டது.

யூலியனின் பகிரங்கப்படுத்தலால் அந்த ஊடகங்களுக்கு அவுஸ்திரேலியா போடப்பட்டிருந்த முற்றுப்புள்ளி தவிர்க்கப்பட்டது. ஆனால் வில்லங்கம் வேறு வழியில் யூலியனைத் தொடர்ந்தது.தன்னைத் தோலுரித்துக் காட்டிய யூலியனை பழிவாங்க அவுஸ்திரேலியா துடியாய்த் துடித்தது. அவுஸ்திரேலியாவில் உளவுத்துறை தன் உச்சபட்ச திறனை உபயோகித்து, யூலியனுக்கு இவ்வளவு தகவல்களையும் அள்ளியெடுத்துக் கொடுத்தது தியோடர்தான் என்ற உண்மையக் கண்டறிந்தது.

ஜேர்மனி அரசுக்கு அவுஸ்திரேலியா கொடுத்த அழுத்தம் தியோடரைக் கைது செய்யும் உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை ஓயவில்லை. தன்னைப் பின்தொடரும் பயங்கரத்தின் நிழலை உணராமல் வழமை போல கோல்ப் விளையாடக் கிளம்பினார் தியோ டர். அவர் பின்னாலேயே நாலு கால் பாய்ச்சலில் ஆபத்தும் நெருங்கியது.

தியோடர் கோல்ப் மைதானத்தில் இலக்கை நோக்கி ஓங்கி அடித்த பந்து விர்ரென மேலெழுந்து, மரங்கள் அடர்த்தியாக வளர்ந்திருந்த பகுதிக்குள் சென்று மறைந்தது. தியோடரின் உதவியாளார் பந்தினை எடுக்கச் சென்றிருந்த இடைவெளியில் சற்று இளைப்பாறுவதற்காக புற்றரையில் தியோடர் அமர்ந்து கொண்டார். வியர்வை ஆறாகக் கொட்டியது. முகத்தை அழுத்தித் துடைத்து விட்டு தியோடர் நிமிர்ந்த போது, வானத்தில் இருந்து குதித்தவர்கள் போன்று அவரை சுற்றிலும் நாலைந்து பேர் உட்கார்ந்திருந்தார்கள். தன்னைப்போலவே அவர்களும் இளைப்பாறுவதற்காகவே அமர்ந்திருப்பதாகவே தியோடர் முதலில் எண்ணிக் கொண்டார். ஆனாலும் அலுங்காமல், குலுங்காமல் ஒரேவிதமான சீருடையில், அப்போதுதான் குளிர்சாதனப்பெட்டியில் இருந்து புறப்பட்டவர்கள் போல புத்துணர்சியுடனும், இறுகிய முகத்துடனும் காணப்பட்ட அந்நபர்கள் வேறு ஏதோ உள்நோக்கத்தோடே வந்திருக்க வேண்டும் என அவர் ஊகித்துக்கொண்டார். அந்தத் தருணத்தில் வந்தவர்களிடமிருந்து முதலாவது கேள்வி பிறந்தது. அந்தக் கேள்வி தியோடருக்கிருந்த சந்தேகத்தை உறுதி செய்வது போல அமைந்தது.

"மிஸ்டர். தியோடர்! நீங்கள் எதற்காக அவுஸ்திரேலியாவுக்குச் சென்றீர்கள்?"

இந்தக் கேள்வியால் முதலில் தியோடர் நிலைகுலைந்து போனாலும் உடனேயே தன்னைச் சுதாரித்துக் கொண்டார். குரலில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, பதிலளிக்க ஆரம்பித்தார். "எனது வர்த்தக நடவடிக்கைகளை விரிவாக்கவே சென்றேன். ஏன் ஜேர்மனியர்கள் அவுஸ்திரேலியாவுக்குச் செல்லக்கூடாதென்று ஏதாவது புதிய சட்டங்கள் வந்துவிட்டனவா?"

**(திரைகள் இன்னமும் திறக்கும்)**

**சுடர் ஒளி வாசகர்களே!**


குடத்தில் இட்ட விளக்காக உங்களுக்குள் மறைந்து கிடக்கும் படைப்புத் திறன்களைக் குன்றின் மேல் தீபமாக்கிட சுடர் ஒளி காத்திருக்கிறது.

சிறுகதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள், எதுவானாலும் அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும்.

படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி,
இல.361
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிலவுப் பயணம் நிஜமா? 01

## இன்னமும் விலகாத மர்மங்கள்

ராஜ்சிவா

"மனிதன் எடுத்து வைத்த சிறிய காலடி, ஆனால் மனித இனத்தின் ஒரு பெரிய பாய்ச்சல்'' 1969 களில் உலகம் முழுவதையும் பரவசமாகப் பேச வைத்த மிகப் பிரபலமான வசனம் இது. சந்திரனில் காலடியெடுத்து வைத்த, முதல் மனிதனான நீல் ஆம் ஸ்ட்ரோங் தனது காலடியைச் சந்திரனின் மேற்பரப்பில் வைத்த கணத்தில் சொன்ன அற்புதமான வசனம்தான் இது. 1969 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி சந்திரனில் மனிதன் காலடி எடுத்து வைத்த நிகழ்வு மிகச் சாதாரணமான ஒன்றல்ல. இன்று நாம் வாழ்ந்து வரும் சூழலில், கணினியின் வளர்ச்சி பிரமிக்கத்தக்க வகையில் உச்சத்தை அடைந்த நிலையில் மிகச் சாதாரணமான ஒரு நிகழ்வாகத் தோன்றலாம். ஆனால் நாற்பத்தி மூன்று வருடங்களுக்கு முன்னர், 1969 ஆம் ஆண்டு நிலவுப் பயணம் என்பது நினைத்தே பார்க்க முடியாதது.

1969 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் திகதி அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் அமைந்த, நாஸாவின் 'கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து, நீல் ஆம்ஸ்ட்ரோங் எட்வின் அல்ட்ரின் மைக்கல் கொலின்ஸ் ஆகிய மூன்று விண்வெளி விற்பன்னர்களையும், சந்திரனை நோக்கி அமெரிக்கா அனுப்பி வைத்தது. அப்போலோ 11 என்று பெயரிடப்பட்ட நிலவுப் பயணத்திற்கு 'சாட்டர்ன் ரக ரொக்கெற் பயன்படுத்தப்பட்டது. மூன்று நாட்களின் பின்னர், 19 ஆம் திகதி சந்திரனை அடைந்த அப்போலா 11 சந்திரனை வலம் வந்தது. நான்காம் நாளான 20ஆம் திகதி அப்போலோ 11லிருந்து பிரிந்த ஒரு சிறிய விண்கலம் சந்திரனில் இறங்கியது. சிலந்தி போன்ற வடிவமைப்பைக் கொண்ட அந்தச் சிறிய விண்கலத்துக்கு 'ஈகிள்' என்று பெயரிட்டிருந்தனர். அமெரிக்காவின் இலட்சிணையான கழுகின் பெயரையே அந்த விண்கலத்துக்கும் வைத்திருந்தனர். 'ஈகிள்' சந்திரனில் இறங்கிய விடயமானது அமெரிக்காவே இறங்கியதாக அடையாளப்படுத்தப்பட்டது.

அந்த ஈகிள் என்னும் விண்கலத்திலிருந்து வரலாறே வியக்கப்போகும் சாதனை மனிதனாக, நீல் ஆம்ஸ்ட்ரோங் சந்திரனில் காலடியெடுத்து வைக்கும் முதல்வனாக இறங்கினார். அவர் தனது காலடியைச் சந்திரனில் பதிக்கும் போது கூறிய வசனம்தான் ஆரம்பத்தில் இருப்பது. ஆம்ஸ்ட்ரோங்கிற்கு அடுத்ததாக, எட்வின் அல்ட்ரின் சந்திரனில் காலடி வைத்த இரண்டாவது மனிதரானார்.

கேட்கும்போது மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும் இந்த வரலாற்று முக்கியம் வாய்ந்த சம்பவங்கள் அனைத்துமே 'அமெரிக்கா செய்து காட்டிய மிக மலினமான ஒரு நாடகம்' என்று உரத்துச் சொல்கின்றனர் பலர். '' சந்திரனில் மனிதன் காலடியெடுத்தே வைக்கவில்லை. எல்லாமே நாஸா மூலமாக அமெரிக்கா செய்த பித்தலாட்டம். அப்போலோ மிசன் என்பதே ஒரு நாடகம். மனிதன் ஒரு போதும் சந்திரனுக்குச் செல்லவில்லை. அப்போலோ 11 மட்டுமில்லை, அப்போலோ 12,14, 15,16,17 களில் கூட மனிதன் சந்திரனைச் சென்று அடையவில்லை. இவை யெல்லாம் பூமியிலே சந்திரனைப் போன்று ஒரு இடத்தை உருவாக்கி, அதில் உருவாக்கப்பட்ட சினிமா போன்ற காட்சிகள் '' என்று பலமான குரலில் மறுக்கிறார்கள் அவர்கள். 'எடுத்தோம் கவிழ்த்தோம்' என்ற நிலையில் இதை அவர்கள் சொல்லவில்லை. வித விதமான ஆதாரங்களை முன் வைத்து நம்மைத் திகைக்க வைக்கிறார்கள். தர்க்க ரீயாகவும், அறிவியல் ரீயாகவும் அவர்கள் சொல்வது சர்வநிச்சயம் என்றே நம்மையும் யோசிக்க வைக்கிறது. இதை ஒரு சூழ்ச்சிக் கோட்பாடாகவே உலகிற்கு வெளிக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

*(மர்மங்கள் தொடரும்)*

# கூர்மையான யோசனைகள்



உங்கள் யோசனை விமர்சனம் செய்வது கண்டு அஞ்சாதீர்கள். விமர்சனம் செய்வதை வரவேற்றிடுங்கள். விமர்சனத்திற்கு நீங்களே வலிய அழைப்பு விடுங்கள். அதிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள். விமர்சனத்துக்கு நன்றி கூறுங் கள். நாணயமான - உதவிகரமான விமர்சனங்களுக்கு உங்கள் உள்ளார்ந்த - உண்மையான நன்றிகளைத் தெரியப்படுத்துகின்றேன்.

விமர்சனம் என்கிற சாணைக்கல் கரடு முரடாக இருக்கும். சாணை பிடிக்கும் போது ஏற்படும் சத்தம் கடூரமாக இருக்கும். ஆனால் உங்கள் யோசனை அதனால் கூர்மையடைகிறது என்று பொருள்.

உங்கள் யோசனை விமர்சனத்துக்கு ஆளாக வேண்டும். அப்போது தான் உங்கள் யோசனை மற்றவர்களுடைய கவனத்தை கவரும். ஒரு சில யோசனை மற்றவர்களுடைய கவனத்தைக் கவரும். ஒரு சில யோசனைகள் தான் உதயமாகும் போதே பழுதின்றிப் பிறக்கும். மற்றவர்கள் என்று யாரைக் கருதுகீறீர்களோ, அவர்கள் நம்மைவிடக் கூர்மையானவர்களாக இருக்கலாம். ஆகவே உங்கள் யோசனைகளை மற்றவர்கள் முன் கொட்டுங்கள். கருத்துக்களைக் கேளுங்கள். பரிந்துரைகளைக் கேளுங்கள். ஆம்; விமர்சனங்களை வலிய விரும்பிப் பெற்றிடுங்கள்.

விமர்சனம் என்கிற சொர சொரப்பான சாணைக் கல்லில் உங்கள் யோசனைகளைக் கூராக்குங்கள். வலியவேண்டி, விரும்பிச் விமர்சனத்துக்கு ஆளாகுங்கள். அதில் அச்சம் வேண்டாம். தொட்டால் சுருங்கி மனப்பான்மை வேண்டாம். ஏன் என்றால் அதன் மூலம் நீங்கள் சீரிய பயன் தரும் வெற்றிகளுக்கான நிரூபிக்கப்பட்ட வழியைக் கையாளுகிறீர்கள்.

நாணயமான, உதவிகரமான விமர்சனங்களோடு கூட சிலர் பொறாமையைக் காட் டலாம். உங்களைப் பாதிக்கக் கூடாது. அதற்கு அனுமதித்து விடாதீர்கள். கேலி செய்யப்படுவதோ ஒரு வகையான பரிசோதனை தான். குறைகள் இருந்தால் தான் கேலி என்பது ஒட்டிக் கொள்ளும். அந்த நேரத்தில் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன? உங்களுடைய யோசனையை சீர் திருத்த வேண்டும். மாற்றி அமைக்க வேண்டும். நட்பு முறையிலோ- அல்லாத முறையிலோ கூறப்படுகிது விமர்சனத்திலிருந்து நீங்கள் கற்றுக் கொள்வது போல கேலி - கிண்டல்களிடமிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஆகவே உங்களுடைய யோசனையானது பொறாமை காரணமாக கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாகலாம். பெறாமை என்பது தாராள மனப்பான்மையின் அடையாளம் அல்ல. என்றாலும் உங்கள் மீது பொறாமை கொண்டால் அது உங்களின் உயர்தன்மையைக் காட்டுகிறது. எனவே அதுவே ஒரு வகைப் புகழ் மாலைதான்.

அதனால்த் தான், ஜான்கே என்கிற ஆங்கிலக் கவிஞன் சொன்னான் "பெறா மையே ஒருவகைப் புகழ் மாலை'' என்று. ''எங்கு பெறாமை குடிகொண்டிருக்கிறதோ, அந்த இடம் மனசாட்சிப்படி தாழ்ந்த இடம் தான்'' என்று ரோமானிய முனிவர் பிளினி கூறினார்.

சிட்னி ஸ்மித் என்னும் மேதை, "கேலி, கிண்டல், பெறாமை இவற்றில் இருந்து உங்கள் யோசனைகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். இளமை முதற்கொண்டே இதற்குப் பழகிக் கொள்ளுங் கள். பொறாமை- கேலி- கிண்டல் இவற்றிற்கு அஞ்சி வாழ்வது என்றால் உங்களது விவகார அறிவு ஒரு நாளும் வேலை செய்யாது'' என்று கூறினார். எனவே செம்மைப்படுத்துவதற்காக உங்கள் யோசனைகளைப் பலரும் அறியக் கொட்டுங்கள். அடக்கமுடன் அறிமுகப்படுத்துங்கள். விமர்சனத்தை வரவேற்கப் பழகிக் கொள்ளுங்கள். விமர்சனம் உங்கள் யோசனைகள் மேலும் பயன் மிக்கவையாகிவிடும்.

(அடுத்த வாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் உலகம்

## மடப்பயலே!



(சென்றவாரத் தொடர்ச்சி....)

'நீ யார்?' என்று விவசாயி அவனைப் பார்த்துக் கேட்டான்.

உடனே அந்தத் திருடன் கண்ணீர் மல்க, "ஐயா! நான் தங்கள் கழுதை தான். என் கதை வேடிக்கையானது. இளம் வயதிலிருந்தே நான் கெட்டவனாக இருந்தேன். என்னிடம் எல்லாக் கெட்ட பழக்கங்களும் இருந்தன.

ஒருநாள் நன்றாகக் குடித்து விட்டு, வீட்டுக்கு வந்தேன். என் தாயார் எவ்வளவோ அறிவுரை சொன்னார் நான் அவரைப் பிடித்து தள்ளியதோடு நன்றாக அடித்துவிட்டேன். என் கொடுமை தாங்க முடியாமல் அவர் என்னை, "கழுதையாகப் போ" என்று சாபம் கொடுத்து விட்டார்கள். நான் உடனே கழுதையாக மாறிவிட்டேன்.

"என்னை நீங்கள் சந்தையில் வாங்கினீர்கள். அத்தோடு, என்னை அடித்து, உதைத்து, துன்புறுத்தி கொடுமைப்படுத்தினீர்கள். நான் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு, உங்களுக்கு உண்மையாக உழைத்தேன்.

இன்றுதான் என் அம்மா என்மேல் இரக்கப்பட்டு எனக்காக கடவுளிடம் வேண்டியிருக்கிறார். அதனால் எனக்கு என் சுய உருவம் வந்து விட்டது" என்றான்.

இதையெல்லாம் அறிந்த அந்த விவசாயி, "ஐயோ! நீ மனிதன் என்று தெரியாமல், உன்னை அடித்து துன்புறுத்தி விட்டேன். என்னை மன்னித்து விடு" என்று அவன் கழுத்தில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டான்.

இருவரும் அவரவர்கள் வழியே சென்றனர்.

ஒருவாரம் சென்றது.

விவசாயி மீண்டும் கழுதை வாங்குவதற்காக சந்தைக்கு சென்றான். அங்கே அவன் கழுதை விற்பனைக்காக நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது.

அந்தக் கழுதை தன் முதலாளியைக் கண்டதும் சந்தோஷத்தில் கத்தியது.

அதைப் பார்த்த அந்த விவசாயி அதன் அருகே சென்று "மடப்பயலே! மீண்டும் குடித்துவிட்டு, உன் தாயை அடித்தாயா? இம்முறை உன்னை வாங்குவதற்கு என்னை என்ன மடையன் என்று நினைத்தாயா?" என்று கத்திவிட்டு, அதன் முகத்தில் உமிழ்ந்து விட்டுச் சென்றான்.

விவசாயி போன்று ஏமாளிகள் இருக்கிற வரையில், ஏமாற்றுக் காரர்கள் இருக்கவே செய்கின்றனர்.✱

# கேள்வி ஒன்று: பரிசு ஆயிரம்

*மாணவ, மாணவியரே! கூப்பனுக்குள் உள்ள கேள்விக்கு என்ன விடை என்று தெரியுமா? தெரிந்தால் உடனே எழுதி கூப்பனைக் கத்தரித்து 23.09.2013 இற்கு முன்னர் அனுப்பிவையுங்கள். சரியான விடை எழுதியோரில் ஒருவருக்கு 1000 ரூபா பணப்பரிசு காத்திருக்கிறது.*

*(வெற்றி பெற்றவர்களின் புகைப்படங்களும் பிரசுரிக்கப்படும். ஆகவே விரும்பியோர் புகைப்படங்களையும் இணைத்து அனுப்பலாம்).*

*கேள்வி:-*

*ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமரின் பெயர் என்ன?*

*பதில்:-* ..........................................................

பெயர் :- ..........................................................

தரம் :- ..........................................................

பாடசாலை :- ..........................................................

✍ அனுப்ப வேண்டிய முகவரி:
கேள்வி ஒன்று: பரிசு ஆயிரம்.
சுடர் ஒளி
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

03

**கேள்வி ஒன்று; பரிசு ஆயிரம் - 01**

*சரியான விடை* - **மூன்று தங்கப் பதக்கங்கள்.**

இந்தப் போட்டியில் ஏராளமான மாணவர்கள் ஆர்வத்தோடு பங்கு பற்றியிருந்தார்கள். அவர்களில் 'நொ தேர்ண் கொம்பியூட்டர்ஸ்' வழங்கும் 1000 ரூபா பரிசினைப் பெறுவதற்காக குலுக்கல் மூலம் வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலி -

**எம்.ராஜ்மோகன்**
*தரம் - 10, கிளி/சிவபாத கலையகம், அ.த.க.பாடசாலை.*

*பாராட்டுப் பெறுவோர்:-*

*01. ந.பதிவேந்தன். தரம் - 8 சி. யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி.*
*02. இ.நிருத்திகா. தரம் - 3. யா/வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.*
*03. வே.சனுஸ்கா. தரம் - 6. தி/இ.கி.ச.ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி.*
*04. சி.அஜந்தன். தரம் - 8. வ/மதியாமடு விவேகானந்தா வித்தியாலயம்.*
*05. ரா.உஷாந்தினி. தரம் - 10. யா/ புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி.*

**பரிசுக்கான அனுசரணை:-**

NORTHERN COMPUTERS
Innovative Solutions!
#303,Kasthuriyar Road,Jaffna
e-mail : ncjaffna@gmail.com
Cont : Shukoor - 077 555 97 55
FREE:Norton Internet Security With All Laptops

HP Pavilion 15 - e016TU
i3 3rd Generation
4GB Ram
500GB HDD
15.6"LED Screen
WiFi
DVD RW
Laptop Bag
Price :Rs.64,000
01 Year Parts Warranty
02 Years Service Warranty

HP Pavilion G6-2311TU
i5 3rd Generation
4GB Ram
750GB HDD
15.6"LED Screen
WiFi
DVD RW
Laptop Bag
Price :Rs.79,500
01 Year Parts Warranty
02 Years Service Warranty

HP 1000 - 1311TU
Intel Dual Core 3rd Gen
2GB Ram
500GB HDD
14"LED Screen
WiFi
DVD RW
Laptop Bag
Price :Rs.52,500
01 Year Parts Warranty
02 Years Service Warranty

DELL Inspiron - 3521
i3 3rd Generation
4GB Ram
500GB HDD
15.6"LED Screen
WiFi
DVD RW
1GB Dedicated VGA
Laptop Bag
Price :Rs.67,500
01 Year Parts Warranty
02 Years Service Warranty

Toshiba Satellite C850
i3 3rd Generation,2GB Ram
500GB HDD,15.6"LED Screen
WiFi,DVD RW,Laptop Bag
Price :Rs.59,000
01 Year Parts Warranty
02 Years Service Warranty

எம்மிடம் சகல விதமான கணினிகள் , அனைத்து விதமான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் அதன் உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையிலும் நம்பகரமான உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ளலாம்.




த் தொடர்

— அம்புலி

கண்ணாடியில் தமது குருநாதர் தோன்றியதும், "வணங்குகிறோம் குருநாதர்" என்று கூறி, இரு கைகளாலும் வணங்கினார்.

"என் ஆசி உங்கள் இருவருக்கும் எப்போதும் உண்டு அது சரி! நீங்கள் பத்திரமாகத் தானே இருக்கிறீர்கள் மாயக் கிழவி உங்களைத் துன்புறுத்தவில்லையே?" என்று குருநாதர் கேட்டார்.

"இல்லைக் குருவே! எங்களை மாயத் தீவுக்கு அழைத்து வருவதற்காக மட்டும் ஏதோ ஒரு மந்திரப் புகையை பிரயோகித்தாள். இதைத் தவிர வேறெந்தத் தீங்கும் அவள் இதுவரை செய்யவில்லை" என்றான் சந்திரவர்மன்.

"நல்லது பிள்ளைகளே! என்ன தான் மாயத்தீவு மந்திரக் கிழவி பில்லி சூனியத்தில் கைதோர்ந்தவளாக இருந்தாலும், நிறையப் பலவீனங்களும் கொண்டவள். அந்தப் பலவீனத்தை வைத்தே அவளை அழிக்க வேண்டும்" என்று குருநாதர் கூறினார்.

"ஆனால் அவளிடம் எந்தப் பலவீனமும் இருப்பதாக நாங்கள் அறியவில்லையே?" என்றான் இந்திரவர்மன். அவளின் பதிலைக் கேட்ட குருநாதரின் இதழ்களில் ஒரு குறுநகை உதயமானது.

"இந்திரா! மாயக்கிழவி மந்திர, தந்திரங்களில் கைதேர்ந்தவளாக இருந்தால், இந்த மாயக் கண்ணாடி மூலம் நாம் உரையாட முடியுமா? தடுத்திருக்கலாம்! இவ்வாறு அவளிடமுள்ள சின்னச் சின்னப் பலவீனங்களைக் கண்டறிந்து சொன்னீர்களானால் அவளை நீங்கள் வென்று வரக்கூடிய வழிகளை நான் சொல்ல முடியும்" என்றார் குருநாதர்.

"அப்படியே செய்கிறோம்!" என்று ஒருமித்த குரலில் இளவரசர்கள் சொன்னதும், கண்ணாடியில் இருந்து குருநாதரின் உருவம் மறையத் தொடங்கியது. *(மந்திரக் கிழவி வருவாள்...)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைவில்... வெகுதொலைவில்



தொழுவத்திற் பிணைத்த
பசுவின் கதறலில் தேங்கிய தவிப்பு
காற்றிற் கலந்து கரைகிறது.

உயிரின் பதைபதைப்பு
உடல் முழுவதும் சுவறி
சிலிர்த்துத் துடிக்கிறது.

வாயேன் வாயேன்
என ஏங்கும் அழைப்புக்கு
பதிற்குரல் வேண்டிக்
குவிந்து துழாவுகின்றன செவிகள்

திசையெங்கும் தேடித் தோற்கின்றன விழிகள்
மேலும் மேலும் ஈரம் ஊறி
சேறாகி நுதம்பிப் புதைகிறது தரை

நிரம்பிக் களைத்து வலியெடுக்கிறது மடி
எதிர்பாராத் திசையிருந்து
ஓடி வந்து முலை கவ்வி மடிமுட்டும்
அந்த வலிகோரி அழுகிறது தாய்மை.

குரலிற் படிந்த ஈரம் வாங்கி
மேலும் கனதியடைகிறது காற்று.

மேயும் தரையில் பொறியின் வசமாகி
தன் இனத்தோடு இழுபடும்
கன்றெழுப்பும் தீனக்குரல்
கேளாவொருதொலைவில்
விணாகித் தேய்கிறது.

**ந.சத்தியபாலன்.**

# என்ன கொடுமையடா!

ஒரு வீட்டில் அமர்ந்து கொண்டு பொழுது போக்கு என்கிற ஒருகாரணப் போர்வையைப் போர்த்திக் கொண்டு ஏறத்தாழ எல்லா வீட்டிலும் இன்று பொழுதைத் தின்று கொண்டிருக்கிற விஷயம் இந்தத் தொலைக்காட்சி. குறிப்பாகப் பல்வேறு தனியார் தொலைக்காட்சி நிலையங்களின் பல தரப்பட்ட (ஆனால் சினிமாவையோ, சினிமாப்பாடலையோ மையமாகக் கொண்ட) நிகழ்ச்சிகள் நான் ஸ்ரொப் (Non Stop) கொண்டாட்டமாக நடந்து கொண்டிருப்பதைக் கண்டு கொண்டே இருக்கிறோம். பல இம்சைகளைத் தாங்கித் தாங்கி ஒரு விதமான அரியண்ட சகிப்பாக இந்தத் தாங்குதல் நிகழ்கின்றது.

அதிலும் பெரிய கொடுமை என்னவென்றால் தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் பயன்படுத்துகிற மொழி தான். தொலைக்காட்சி நிலையம் தமிழ்த் தொலைக்காட்சி நிலையம் தான். ஆனால் அறிவிப்பாளர்கள் பயன்படுத்துகின்ற தமிழ், அர்த்த நாரீஸ்வரராகிய சிவனைப் போல பாதி தமிழ் பாதி ஆங்கிலமாக



அமைந்திருப்பது தான் சகிக்க முடியாதாக உள்ளது.

'ஒரு பானை நிகழ்ச்சிக்கு ஒரு அறிவிப்பு பதம்.'

"இதோ அடுத்த 'ஹோலர்' யாருன்னு பார்க்கலாம். ஹலோ சிவா எப்படியிருக்கிறீங்க? உங்க 'லைப்' எல்லாம் எப்படிப் போயிட்டிருக்கு 'வேர்க்' பண்றீங்களா? என்ன பண்ணிட்டிருக்கிறீங்க இதோ 'சுப்பர் சோங்' ஒன்று வருகுது. 'என்ஜோய்' பண்ணுங்க"

என்ன கொடுமையடா இது?

# நெஞ்சக் கிளர்வு

•வசியன்

# வாசிப்பு:

## உன்னத அனுபவங்களின் நுழைவாயில்



**வா**சிப்பு என்னும் கிரியை சாதாரணமாக கற்றல் நடவடிக்கைகளின் ஒரு கூறாகவே மிகப் பலரால் புரிந்து கொள்ளப்படுகிறது. அதிலும் குறிப்பாக கல்விப்புலத்தில் தொழிற்படும் பலர் கற்றல், கற்பித்தலுக்கான ஒரு செயற் பாட்டுக் கூறாகவே இக்கிரியையினைப் புரிந்து கொண்டுள்ளதோடு கற்போருக்கும் அவ்வாறே புரியவைக்கவும் முயற்சித்து வருகிறார்கள். வாசிப்பு என்கிற தொழிற்பாட்டின் அர்த்தம் இவ்வாறு "கூடுகட்டி" எல்லைப்படுத்தப்படுவது சரியான காரியமாகாது. பரீட்சையொன்றுக்குத் தயார் செய்யும் ஒருமாணவன் தகவல் சேகரிக்கவும் ஆதாரங்களை தேடியறியவும் வேண்டி ஒரு புத்தகத்தைப் படிப்பது கல்வியுடன் தொடர்பு பட்ட ஒரு காரியம். அதில் வாசிப்பு அனுபவம் பற்றியெல்லாம் பேச இடமில்லை.

வாசித்தலின் மூலமாக அடையக் கூடிய ஒருமகிழ்வை - ஒரு மனநிறைவை - ஒருஅனுபவத்தை நோக்கிய வாசிப்பு வேறான ஒன்று. ஒருஅரிய நூலை வாசிக்கின்றபோது நாம் ஒரு உலகத்துள் பிரவேசிக்கின்றோம். அந்த நூலின் படைப்பாளி வாசகனோடு மேற்கொள்ள விரும்புகின்ற அனுபவப் பகிர்வு முயற்சி, அந் நூலினூடாக வாசகன் பெறுகின்ற தரிசனம், வாசகனின் அக உலகில் ஏற்படுத்தப்படுகிற தாக்கம் இவையெல்லாம் ஒரு நல்ல படைப்பில் இருக்கவே செய்யும். அது ஒரு சிறுகதைத் தொகுப்பாக, ஒரு நாவலாக, ஒரு கவிதைத் தொகுப்பாக எப்படியிருப்பினும் அதனூடு பெறும் அனுபவ மேன்மை உன்னதமாகிறது.

ஒரு நல்ல அனுபவத்தை நாடி வாசிக்க முற்படும் ஒருவன், தான் தெரிந்தெடுக்கும் நூல் பற்றி ஒரு முன்னறிவோடு அல்லது அறிமுகத்தோடு தான் அதை வாசிக்கத் தொடங்குவான். (அல்லது அப்படியான ஒரு எதிர்பார்ப்போடு வாசிக்க முற்படுபவர்கள் ஒரு முன்னறிவு அறிமுகத்தைப் பெற்றுக் கொண்ட பின் வாசிக்கமுற்படுவதே பொருத்தமானது)

சில படைப்புக்கள் தனது உள்ளடக்கம், மொழிநடை, படைப்பாளியின் அணுகுமுறை படைப்பின் பொதுவான அடிப்படைத்தன்மை என்பனவற்றால் ஒரு குறிப்பிட்ட தரத்தை எட்டியபடைப்புகளாகத் திகழ்வதைப் பார்த் திருக்கிறோம். அவற்றினூடான அனுபவமும் உன்னதமாக அமைவதுண்டு. தாய், அன்னை வயல், புத்துயிர்ப்புபோன்ற மொழிபெயர்ப்பு நாவல்களாகட்டும் அம்மா வந்தாள், மரப்பசு, உன்னைப் போல் ஒருவன், பாரீசுக்குப்போ, ஒருமனிதன் ஒழுங்கு, ஒரு உலகம், சில நேரங்களில் சில மனிதர்கள், ஒரு புளியமரத்தின்கதை, ஜே.ஜே சில குறிப்புகள், பிறகு, கடல் புரத்தில் போன்ற தமிழ் நாவல்களாகும் அல்லது சிறந்த கவிதையாகவோ, சிறுகதையாகவோ இருக்கட்டும். அவற்றை வாசிக்கும் போது பெறப்படும் அக அனுபவம் மொழியின் நிகழ்த்தவல்ல இரசயானம் தனித்துவமானது. (இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நூல்கள் திட்டமிட்டுக் குறிப்பிடப்பட்டவையல்ல. இதனை எழுதுகையில் மனதிற் பட்ட தோன்றிய நூல்கள் தான்.) வாசித்தல் என்றும் அனுபவத்தின் தனித்துவம். புரிந்தவர்கள் இதனை ஒப்புக் கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிரிப்பு... நல்லதா? கெட்டதா?

**சி.வதனி,**

**கொடிகாமம்.**

**கே :** வடமாகாணத் தேர்தலுக்காக சுவர்களில் ஒட்டப்பட்டுள்ள நோட்டிஸ்களிலும், பிரசாரத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்ற பாடல்களிலும் அண்மையில் வெளிவந்த 'தலைவா' படத்தில் இடம் பெற்ற ஒரு பாடலை கட்சி பேதமின்றி எல்லோரும் பயன்படுத்துகிறார்களே. இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

**ப :** உதைத்தான் சொல்லுறது சமரசம் உலாவும் பாடல் எண்டு. என்னதான் தங்களுக்குள்ள பிச்சுப் பிடுங்கினாலும் ஒரே மாதிரிப் பாட்டு வரிகளைப் போடுறதிலையாவது எங்கட வேட்பாளர்கள் ஒற்றுமையாய் இருக்கினமெண்டு சந்தோசப்படாமல் உதென்ன வயித்தெரிச்சல் வந்தமாதிரிக் கேள்வி.



நான் நினைக்கிறன் இப்பிடி வடமாகாண எலெக்சன் வருமெண்டு தெரிஞ்சுதான்போல தம்பி விஜய் அந்தப் படத்தில உப்பிடியொரு பாட்டைப் போட்டிருக்கவேணும். தமிழகத்தில கூட அந்தப் பாட்டு இவ்வளவு 'பேமஸா' ஒலிபரப்பாகியிருக்குமோ எண்டு சந்தேகம்தான். இவையெல்லாரும் தங்களுக்கு விளம்பரம் செய்யிறதவிடவும் தலைவா படத்துக்குத்தான் மறைமுகமா விளம்பரம் செய்திருக்கினம். ஒண்டு இரண்டு வேட்பாளர்கள் அந்தப் படத்தில விஜய் வாரமாதிரி உடுப்பு, கண்ணாடி போட்டெல்லாம் கலக்குகினம்.

பாவம் ஏற்கனவே தலைவா படத்த வெளியிட விடாமல் அம்மா இழுத்தடிச்சதால விஜய் நொந்துபோய் இருக்கிறார். எங்கட ஆக்களின்ர எலெக்சன் கூத்துகளுக்குத் தன்னைப் பாவிக்கினம் எண்டு தெரிஞ்சால் கட்டாயம் ஒரு கயிறு எடுத்து தொங்கினாலும் தொங்கிடும்.

**தி.கௌசிகா,**

**வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்.**

**கே :** பித்தரே! எனக்கு ஒரு டவுட். சிரிப்பதால் ஆயுள் கூடுகிறது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆனால் சிலர் "சிரித்தால் அழப் போறீங்கள்" என்று கூறுகின்றனர். அப்போ சிரிக்கிறது நலமா? கூடாதா?

**ப :** இடுக்கண் வருங்கால் நகுக. எண்டு வள்ளுவரே சொல்லியிருக்கிறார். சிரிச்சால் எங்கட ஆயுளில ஐந்து நிமிசம் அதிகரிக்கும் எண்டு விஞ்ஞானிகள் சொல்லுகினம். ஒரு படத்தில செந்தில் ஒரு சிகரெட்டக் குடிச்சுப்போட்டு இறுக்கிச் சிரிப்பார். ஏன் எண்டு கேட்டா "சிகரெட் குடிச்சால் ஆயுளில ஐந்து நிமிசம் குறையுமாம். அத மாதிரி சிரிச்சால் ஐந்து நிமிச ஆயுள் கூடுமாம். அதுதான் சிகரெட்டால போன ஆயுள சிரிப்பால சமப்படுத்திறன்" எண்டு சொல்லுவார். எப்பவுமே சிரிப்பெண்டது நல்ல விசயம் தான். ஆனால் அந்தச் சிரிப்பு மற்றவையத் துன்பப் படுத்தக் கூடாது. பக்கத்து வீடு எரியேக்க அதப்பாத்து சிரிக்கிறதுதான் ஆபத்தானது. அதமாதிரி நெடுகச் சிரிக்கிறதும் கூடாது. பிறகு உங்களக் கொண்டுபோய் அங்கோடையில விட்டிடுவினம்.




வள்ளுவர் சொன்னமாதிரி துன்பத்தில சிரிக்கிறவன்தான் ஞானி. உங்கட பித்தரும் கிட்டத்தட்ட ஞானிதான். மிஸிஸ் பித்தர் எவ்வளவுதான் அடிச்சாலும் நோகாத மாதிரி நடிச்சுக் கொண்டு உங்கட கேள்விக்கும் சிரிச்சுக்கொண்டே பதில் சொல்லுற பித்தர் ஞானி இல்லாம வேற யார்?

## சொற்சிலம்பம் போட்டி இல: 586

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | |
| 6 | | | ■ | 7 | 8 | | ■ |
| 9 | | | | ■ | 10 | | |
| | ■ | | ■ | 11 | | | ■ |
| ■ | 12 | ■ | 13 | | | ■ | 14 |
| 15 | | 16 | ■ | | ■ | 17 | |
| | ■ | 18 | 19 | | 20 | ■ | |
| 21 | | ■ | | ■ | 22 | | |

**மேலிருந்து கீழ்**

1. அன்பு
2. புராணத்தில் முனிவர் போன்றோர் கோபமுற்றுக் கூறும் ஆணை.
3. வெளிப் பகட்டு
4. மலை (த்தல்)
5. பண்டைய நூலில் நூலாசிரியர் தகுதி
8. அவமானம்
11. சமையலில் பயன்படுத்தப்படும் சிறுவிதை
12. மாமாவுக்குப் பெண்பால்
14. சரியாக அரைவாசி
15. போல
16. தோழி
19. ஒருவர் பிறக்கும் நேரத்தில் ஒருவருடைய ஜாதகத்தில் சந்திரன் இருக்கும் இடம்
20. பூமி

**இடமிருந்து வலம்**

1. ஏமாற்றுக்காரன் (மரபுச் சொல்)
5. வள்ளல் ஒருவர்
6. நறுமணப் பொருள்களை தணலில் போட்டு உண்டாக்கப்படும் புகை
7. இராமன் காடாளக் காரணமாக இருந்தவள்
9. கூரான பற்களுடைய இரும்புத் தகடு பொருத்தப்பட்டு அறுப்பதற்குப் பயன்படும் உபகரணம்.
10. கடவுள், முனிவர் ஆகியோர் பக்தர்களுக்கு . வழங்குவது
11. உயர்ந்த பண்பு
13. தொலைவு
15. விலங்கினத்தின் இறைச்சி சம்பந்தப்பட்ட
17. குளம்
18. ஒரு வாசனைப் பொருள்
21. முனிவர்
22. வாடகைக்கு அறைகள் வழங்கும் இடம்

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 586

சொற்சிலம்பம் போட்டி 586 க்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 25 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 18 ஆம் மற்றும் ஒக்ரோபர் 02 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 584 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.கபோதி, 2. தாசன், 3. பானை, 4. திரட்டி வை, 5. ரசிகன், 8.கன்னி, 10. புட்டி, 11. நாட்டம், 13. ககனம், 14. பாடகன், 17. மது, 18. கண்

**இடமிருந்து வலம்**

1.கதாபாத்திரம், 6.போசனை, 7. ரசி, 9.தின், 10. புட்கரன், 11.நாட்டின், 12.புகட்டி வை, 15. கட, 16.கடமை, 17.மனம், 19.கனா, 20. தும். 21.நண்பன்.

### போட்டி இல. 583 இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** — பீ.எஸ்.ஏ.தாஹிர், இல.10/1, மத்திய வீதி, காத்தான்குடி - 03.

**2ஆம் பரிசு** — கனகசபை நாகேந்திரன், இல. 11 - 3/1, நெல்சன் இடம், வெள்ளவத்தை, கொழும்பு - 06

**3ஆம் பரிசு** — கே.இராஜகோபால், அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை

### பாராட்டுப் பெறுவோர்

(1) க.தில்லையம்பலம், கதிர்காம கோயிலடி, வதிரி, கரவெட்டி.
(2) Y.L.றினோசா, அல் அறபா வீதி, அட்டாளைச் சேனை - 10
(3) ச.சண்முகவடிவேல், இல.43/3, திசவீரசிங்கம் சதுக்கம் மேற்கு, மட்டக்களப்பு.
(4) வி.யிந்துசா, சோறன்பற்று, பளை.
(5) சின்னையா செல்வராஜ், 9/5 - B - 10, மஜித் பிளேஸ், அவிசாவெலை வீதி, வெல்லம்பிட்டிய.
(6) த.சாம்பசிவம், B4 -F -20 புளூமெண்டல் தொடர்மாடி, கொழும்பு-13
(7) திருமதி ம.பரமேஸ்வரஐயர், இல.270, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(8) திருமதி T.செல்வதுரை, இல. 11 - 5/1, சென்ற் லோறன்ஸ் றோட், வெள்ளவத்தை, கொழும்பு - 06
(9) செல்வி ப.செல்வநாயகம், இல.108 - 5/3, மனிங் பிளேஸ், கொழும்பு - 05.
(10) சந்திராணி தங்கத்துரை வட்டவிதானை வீதி, பெரிய நீலாவனை - 01A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் திருவிழா



கோடி கோடியாய்
செலவு செய்து
தெருக்கொடியெங்கும்
தேடி வருவார்

வண்ண வண்ணமாய்
வார்த்தைகள் கூறி
வாட்ட சாட்டமாய்
வலம் வருவார்

விம்மியழும் சிறுவருக்கு
பஞ்சுமுட்டாய் கொடுப்பது போல்
பல வொருட்கள்
சுமந்தே வருவார்

புடை சூழுவார்
படையெடுத்து
விடை கிடைத்ததும்
விடைபெறுவார்

கூடுவார் கூட்டம்
கேட்டது கொடுப்போமென்பார்
ஓட்டுக் கிடைத்ததும்
எடுப்பார் ஓட்டம்

மனம் கவர்ந்து
மதி மயக்க
மலியும் பொருட்களுடன்
மக்களை நாடிவருவார்

வாசல் படி வந்து
வாக்குக் கேட்டு
நாக்குத் தொங்க
நாயாயலைவார்

ஆலைகளமைத்து
வேலைகள் தந்து
சாலைகள் போட்டு
சாதனை படைப்போமென்பார்

புது மனைகளமைப்போம்
புத்துயிர் வெற
புதுமைகள் படைப்போமென்று
புகலிடம் தேடுவார்

காணாமற் போனோரைக்
கண்டுபிடிப்போம்
கம்பிக் கூட்டிலுள்ளவரை
கையளிப்போம்
புனர்வாழ்வு பெற்றவருக்கு
புதுவழி காட்டுவோ என்பார்

நிகழ்வைத் தொடக்கி
அடிக்கல்நாட்டி
கிடப்பில் போட்டு
அகன்று
ஒற்றுமையென்று
ஓரணியில் நிற்காது
ஒன்று படுங்கோளென்பார்

கொள்கை களற்றவர்
கொள்ளையடிக்க
வெள்ளையாடையுடுத்தி வந்து
வெல்ல வையுங்களென்பார்

ஆரவாரத்துடன்
அரவணைப்பார்
ஆசனம்கிடைத்ததும்
ஆர் நீயென்பார்

முள்ளி வாய்க்காலில்
கொள்ளி வைக்க முடியாது
உறவுகள் பட்ட தவிப்பு
இதயத்தில் துடிக்கிறது

அழிந்த தேசத்தின் – நாம்
இழுந்தவைகள் ஏராளம்
இடப்போடும் புள்ளடி
விடிவை தேடித்தரும்
வேள்வியாக இருக்கட்டும்


வடுக்களைச் சுமப்பவர்
வாழ்வின் மாற்றம் வேண்டி
வரலாறு படைக்க தவறாதீர்
வாக்காளப் பெருமக்களே!

கொட்டடி கோமகன்,யாழ்ப்பாணம்.

# கவிதைப் புனல்

## வலி

ஒவ்வாருவருடைய புன்னகையிலும்
ஓராயிரம் அர்த்தங்கள் – ஆனால்
என்னுடைய புன்னகையில்
ஒரே ஒரு அர்த்தம்தான் – அது
என் சோகத்தின் அடையாளம்
இதயத்தின் வலியும் கூடவே



தி.சௌசிகா
வெள்ளாம் போக்கட்டி
கொடிகாமம்.

## அது அவர்கள் உலகம்



- துவாரகன்

அழு
வாய்விட்டு அழு
கண்ணீர் தீரும்வரை அழு
நெஞ்சடைக்கும் பாரம் குறையும்வரை அழு

உன் உண்மை முகத்திலிருந்தும்
ஈரம் நிறைந்த உள்ளத்திலிருந்தும்
எழுந்து வரும் கண்ணீரும் ஓலமும்
உனக்கான உலகம் என்றாகிவிட்டது.

அது அவர்களின் உலகம்
அந்த உலகின் சொற்கள் நஞ்சூறியவை
அந்த உலகின் முகங்கள் போலியானவை
அதில் நீ சஞ்சரிக்கமுடியாது.

உன் ஓலம்
ஒரு பறவையின் சிலு சிலுப்பு மட்டுமே.
மரத்துப் போனவர்கள்!

## கண்டுபிடிப்பு



மனிதா! நீ ஆறறிவு
கொண்டவனா?
அழகழகாய்
கண்டு பிடிக்கிறாய்
அணுவணுவாய்
சோதனைகள்
ஆராய்ச்சிகள்
ஏராளம் உன்னிடத்தில்

அறிவு கொண்டு
நீ செய்யும்
பல கோடி கண்டு பிடிப்பு
உலகமே வியக்கும்

முயற்சி கை கூட
ஆவலோடு நாளை நீயும்
வீணாக்காமல் செய்கிறாய்
பல பயன் மிக்க
செயற்பாடுகள்
உன்னைப் போல்
தான் நானும் – ஆனால்
எனக்குத் தெரியும்
அழகாய் நீ
கண்டு பிடிக்கும்
ஆயுதங்களை
இவ்வுலகில் நீ
படைத்தாலும்
உனக்கு மாலையிடுவதும்
அவையே
மலர் வளையம்
வைப்பதுவும் அவையே தான்!
அவை தான் உன்
கண்டு பிடிப்புகள்

குணசேகரன் சக்தீனா.வேரவில்.

## கூடுகள் கலைந்தன



மரம் வெட்டியதற்காக
ஆர்ப்பாட்டம்..
அடிதடி...
வீதி மறியல்....
அடுத்த நாட்டில் அரசியல் பேசினர் இவர்களுக்காக....
மரத்தில் தொங்கிய கூடுகளையும்
குயில்களையும் பற்றி பேச யாருமில்லை..
அவற்றில்
பாதங்கள் பட்டு மாண்டன பாதி
நாடுகள் கடந்து ஓடின மீதி
காட்டினில் மறைந்தன
காயங்கள் ஆறுமுன் காயங்கள் பட்டன
கூட்டுக்குள் இட்டனர் குஞ்சுகளை
அவை
சூரியன் முகம் காணாமலே.....
தப்பிய குயில்கள் சும்மாவா இருக்கும்?
கூவிக்கூவி கூடுகள் கட்டின
கூடி இருந்து தம்மையும் காத்தன
எல்லா விலங்கும் ஒன்றாய் ஆயின
சேர்ந்தே வந்து சிறகுகள் கொய்தன
அமைதி.. அமைதி.. எங்கணுமே..
உலகம் கூடி அமைதிகொண்டது
மரண அஞ்சலியோ?
குயில்களும் இல்லை கூடுகளும்இல்லை
என்று சொன்னபின்-பெரு
மூச்சு விட்டன..
தப்பயகுயில்களில்
சிறகுகள் இல்லை
குரல்களும் இல்லை
எல்லாம் இருந்தவை
தஞ்சம் புகுந்து
நல்லகூடு
நல்லமேடை
வேறென்ன வேணும்
நாட்டில் உள்ளோருக்கு ? –இலக்கியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் கவுண்டரும் சேருவோம்



கவுண்டமணி- செந்தில் ஜோடியை தமிழ் ரசிகர்கள் அவ்வளவு எளிதில் மறக்க மாட்டார்கள். இன்னமும் குலுங்கிச் சிரிக் கவைக்கும் நகைச்சுவைகளை இந்த இணை தமிழ்சினிமாவில் தந்துள்ளது. ஆனால் இப்போது இருவருமே தமிழ் சினி மாவின் பக்கம் தலையே காட்டு வதில்லை. அப்படிக் காட்டி னாலும் கூட தனித் தனியேதான் வருகிறார்கள். இது குறித்து செந்திலின் சின்ன நேர்காணல் இதோ.

**★ கவுண்டமணியும், நீங்களும் சேர்ந்து மீண்டும் நடிக்க வந்தால் நன்றாக இருக்குமே?**

கவுண்டமணி அண்ணனும் நானும், புதுசா வரும் படங்களைப்பற்றி அடிக் கடி பேசிக்கொள்வோம். எங்கள் இரண்டு பேரையும் சேர்த்து நடிக்க வைப் பதற்கு சில இயக்குநர்கள் முயற்சி எடுக்கிறார்கள். அதனால் விரைவிலேயே இரு வரையும் சேர்த்து நீங்கள் திரையில் பார்த்து சிரிக்கும் வாய்ப்புக் கிடைக்கும்.

**★ உங்கள் மகன் சினிமாவில் ஹீரோ ஆகப்போகிறார் என்று செய்தி வந்ததே ?**

அப்படித்தான் செய்தி போட்டார்கள். ஆனால், அவன் விறிவல் கொம்யூனி கேஷன் படித்து முடித்து விட்டு, இப்போது அஜித் நடிக்கும் 'வீரம்' படத்துல உதவி இயக்கு நராக இருக்கிறான். என்னுடைய திறமையை வைத்துத்தான் நான் முன்னேறினேன். அதே மாதிரி, நீயாக தயாரிப்பாளரைத் தேடிப் போய்தான் இயக்குநர் ஆக வேண்டும். என் மகனாகப் பிறந்ததுக்காக, நீ இயக்கும் படத்தை நான் தயாரிக்க மாட்டேன்' என்று அவனிடம் தெளிவாகச் சொல்லிவிட்டேன். கூடிய விரைவில் நீங்கள் அவனை இயக்கு நராகப் பார்க்கலாம்.

**★ நீங்க ஹீரோவா நடிச்ச ஆதி வாசியும் அதிசயப்பேசியும் படம் வருமா?**

ஓரளவுக்கு அந்தப்படத்தின் காட் சிகளை எடுத்துவிட்டார்கள். படத்தின் தயாரிப்பாளர்களுக்குள் சின்னப் பிரச்சினை. இதனால் நீண்டநாள்களாக படப்பிடிப்பு வேலைகள் முடங்கிக்கிடக் கின்றன. இப்போது, இன்னொருத்தர் அந்தப் படத்தைத் தயாரிப்பதாகச் சொல்லி யிருக்கிறார். கண்டிப்பாக அந்தப் படம் வரும்!






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# நீங்கள் வெற்றியாளர்

அர்ப்பணிப்புடனும், முயற்சியுடனும் வெற்றியை நோக்கி நீங்கள் முன்னகர்வதை நாம் மிகவும் மகிழ்ச்சியுடன் நோக்குகிறோம். நம்பகமான தோழனாக எம்மையும் இணைத்து நீங்கள் செல்லும் இந்த வெற்றிப்பயணத்தின் 25 ஆண்டுகள் நிறைவில் கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ் நிறுவனம் தனது மனமார்ந்த **நன்றிகளை** உங்கள் அனைவருக்கும் தெரிவிப்பதில் பெருமை அடைகின்றது.

25 1988 2013

நம்பகமான தோழன்

பெருமைக்குரிய 25 ஆண்டுகள் நிறைவு

CLC

கொமர்ஷல்

லீசிங் & பினான்ஸ்



# இந்திய யாத்திரை

**நாட்கள்: 12,**
**யாத்திரிகள்: 10,**
**ஆரம்பம்: 20.10.2013**

தரிசிக்கும் ஆலயங்கள் மலைக்கோட்டை விநாயகர், திருப்பதி, வேலூர் பொற்கோவில், கல்கிபகவான், அலமேலுமங்கா, பழனி, திருவண்ணாமலை, மாங்காடு, திருவேற்காடு, காளகஸ்திரி, திருத்தணி, கபாலீஸ்வரர், அஷ்ட லெட்சுமி, ஆறுபடை முருகன், ஒரே இடத்தில், மீனாட்சி சுந்தரேஸ்வரர், பழமுதிர் சோலை, அழகர் கோவில், திருச்செந்தூர், ஸ்ரீ ரெங்கம், திருவானைக்காவல், இராமேஸ்வரம், நவபாஷானம், மேல்மருவத்தூர், உத்திரகோச மங்கை, பிரசின்னவெங்கடாசலபெருமான், ஸ்ரீ நவசாய்பாபா மந்திர் (சீரடிபாபா) 35 க்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம். நேரமிருந்தால், சதுரகிரி, சுந்தரம காலிங்கேஸ்வரரையும் தரிசிக்கலாம். சித்தர்கள் மலையில் வாழ்ந்த இடம், ஒரு நாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம்.

**எமது சேவை:** இருவழி விமான டிக்கட் மூன்று வேளை உணவு, இரண்டு பேருக்கு குளியல் அறையுடன் கூடிய அறைகள், வாகன வசதி, ஒவ்வொரு நாளும் ஒரு லீற்றர் மினரல் வோட்டர், ஏயார்போர்ட் போய்வர வாகன வசதி, 4 மணிக்கு கோப்பி, தேநீர் என்பன எமது சேவைகளாகும். (துங்களிடம் வாங்கும் பணத்திற்கான சேவை)

**மேலதிக விபரங்களுக்கு கேட்டறிந்து பதிவு செய்யவும்.**

**கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்**
59, 3/3 C, செட்டியார் தெரு, கொழும்பு -11
**T.P: 0777 680102 / 0724 222 989**

**முக்கிய கவனிப்பு:**
13.09.2013 இக்கு முன்னதாகவும் தவறின் 04.10.2013 இற்கு முன்பும் தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம்.


# உங்கள் கனவுகள் நனவாகுமா???...

Green City Apartments

தற்போது கொழும்புக்கு நடந்து வரும் தூரத்தில்
தொடர்மாடி வீடமைப்புத் திட்டம்
ரூபா. 1,285,000/=
(ரூபா. பன்னிரண்டு இலச்சத்து எண்பத்தையாயிரம்)

- கொழும்பு 15 மட்டக்குளியவிற்கு நடந்துவரும் தூரத்தில்
- பெட்டாவுக்கு 30 நிமிடத்தல் செல்லலாம்
- நீர்கொழும்பு வீதிக்கு 10 நிமிடத்தில் செல்லலாம்
- லைசியம் சர்வதேச பாடசாலை, கார்கில்ஸ் பூட்சிட்டி, கீள்ஸ் சுபர் மற்றும் கோவில் என்பன தெரியும் தூரத்தில்
- மேல்மாடியிலிருந்து கொழும்பு நகர் மற்றும் கடற்கரையை பார்வையிடலாம்.

*Housing Unit consists of Living, Dinning with Pantry, Bedroom with attached toilet (Commode fitted), Balcony and servant's toilet.*



விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டதிதிற்கு இன்றே வருகைதந்து Housing Unit ஐ ரூபா. 5,000/-ம் செலுத்தி முன்பதிவு செய்துகொள்ளுங்கள் தாமதத்திற்கு வருந்தாதீர்கள..

| | |
|---|---|
| இடத்திற்கு செல்லும் மார்க்கம் | அலகந்தவிற்கு வந்து பள்ளியாவத்த வீதியில் இடதுபக்கம் திரும்பி காமில் மாவத்தையில் இடத்திற்கு செல்லலாம். |

## மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள

| | | |
|---|---|---|
| தமிழில் | : | 0776 959197 ராஜாவுடன் தொடர்பு கொள்ளுங்கள் |
| ஆங்கிலத்தில் | : | 0776 147065 ஜெரியுடன் தொடர்பு கொள்ளுங்கள் |
| சிங்களத்தில் | : | 0776 216016 குமாரவுடன் தொடர்பு கொள்ளுங்கள் |

**Nimavin Developers (Pvt) Ltd**
87, Ward Place, Colombo 07.
Tel : (011) 2695714 / (011) 2695728
Visit our Web Site : www.nimavingreenpark.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org